
மணிமேகலைப் பிரசுரம்

# செந்தமிழ் நாடெனும் போதினிலே...



சிறுகதைகள்

## சி. குமாரலிங்கம்

ஸ்ரீ - சிவகாசன்

58 -
கனகரத்தினம்
அரியாலை வீதி -
JAFFNA.

FROM
திரு. பொனைய நிராஞ்சா
விவாகம்
ஸ்ரீ - கிருபா விமலா
91/18 A
MIDLAND MAWATA
WATARAPOLA RD -
MOUNT LAVANIA
T-P - 0112 724081 -

# செந்தமிழ் நாடெனும் போதினிலே

(சிறுகதைகள்)

## சி. குமாரலிங்கம்

மணிமேகலைப் பிரசுரம்
தபால் பெட்டி எண் : 1447
7 (ப.எண் 4), தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24342926
தொலைநகல் : 0091-44-24346082
மின் அஞ்சல் : manimekalai1@dataone.in
WebSite : www.tamilvanan.com

# நூல் விவரம்


| | |
|---|---|
| நூல் தலைப்பு | **செந்தமிழ் நாவடினும் போதினிலே** |
| ஆசிரியர் | **சி. குமாரலிங்கம்** |
| மொழி | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | 2007 |
| பதிப்பு விவரம் | முதற் பதிப்பு |
| உரிமை | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | 11.6 கி.கி. |
| நூலின் அளவு | கிரௌன் சைஸ் (12½ x 18½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | 11 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | 112 |
| அட்டைப்பட ஓவியம் | கிறிஸ்ட் |
| லேசர் வடிவமைப்பு | கிறிஸ்ட் கம்ப்யூட்டர்ஸ் ✆ 23725639 |
| அச்சிட்டோர் | ஸ்கிரிப்ட் ஆஃப்செட் சென்னை - 94. |
| நூல் கட்டுமானம் | தையல் |
| வெளியிட்டோர் | **மணிமேகலைப் பிரசுரம்** சென்னை - 17. |

நூலின் இந்திய விலை : **ரூ. 30.00**

16-09-1992ல்

சிவபதமடைந்த

எமது தாயார்

திருமதி பதஞ்சலி சின்னத்தம்பி

அவர்களுக்கு

இந்நூல்

சமர்ப்பணம்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | செந்தமிழ் நாடெனும் போதினிலே | 7 |
| 2. | நன்றும் தீதும் பிறர் தர வாரா | 10 |
| 3. | வரப்பிரசாதங்கள் | 15 |
| 4. | நல்லதோர் வீணை செய்தே | 21 |
| 5. | காலை எழுந்தவுடன் படிப்பு | 25 |
| 6. | ஓடி விளையாடு பாப்பா | 29 |
| 7. | திருப்பள்ளி எழுச்சி | 34 |
| 8. | தோழமை | 38 |
| 9. | பாருக்குள்ளே நல்ல நாடு | 44 |
| 10. | பாற்கஞ்சி | 48 |
| 11. | புகழ் | 52 |
| 12. | நாயும் மனிதனும் | 56 |
| 13. | சின்னஞ்சிறு கிளியே | 59 |
| 14. | பெற்ற தாயும் | 63 |
| 15. | பெய்யெனப் பெய்யும் மழை | 69 |
| 16. | சிறு பிள்ளை வேளாண்மை | 73 |
| 17. | உன் கண்ணில் நீர் வழிந்தால் | 80 |
| 18. | பஞ்சாமிர்தம் | 84 |
| 19. | முதற்பரிசு | 87 |
| 20. | பற்றாக்குறை | 91 |
| 21. | எவறெஸ்ட் | 94 |
| 22. | வெற்றியில் தோல்வி | 98 |
| 23. | அர்ப்பணிப்பு | 101 |
| 24. | ஒரு ரூபாய் | 105 |
| 25. | எந்தையும் தாயும் | 108 |

# என்னுரை

01.04.1947இல் மீசாலையில் பிறந்தேன். எனது தகப்பனார் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தின் முதலாவது நாற்பது கால ஆண்டு அதிபர்.

1969இல் நான் இலங்கை வங்கிப் பணியில் சேர்ந்தேன். கொழும்பு (1969), காலி (1970), அனுராதபுரம் (1972), கந்தளாய் (1977), கிண்ணியா (1978), திருமலை (1979), மஸ்கெலியா (1992), ஹற்றன் (1993), வவுனியா (1994) மற்றும் யாழ்ப்பாணம் (1975&1996), யாழ் ஸ்ரான்லி (1984), சுன்னாகம் (1991), சாவகச்சேரி (1992) ஆகிய இடங்களில் பணியாற்றினேன்.

வெளி மாவட்டக் கிளைகளில் பணியாற்றிய அனுபவங்களைக் கொண்டு ஒவ்வொரு கிளையையும் மையமாக வைத்து ஒரு சிறுகதை எழுதினேன்.

அநியாயத்தைப் பொறுத்தது, டாம்பீகத்தை மறுத்தது, சேவையில் சிறந்தது போன்றவை எனது குணநலன்கள்.

**சி. குமாரலிங்கம்**

# செந்தமிழ்
# நாடெனும்
# போதினிலே

91 18 A

MIDLAND

WATARAPOLA RD

## செந்தமிழ் நாடெனும் போதினிலே

**நா**ன் மட்ராஸ் பஸ் நிலையத்தை அடைந்த பொழுது இரவு 7 மணியிருக்கும். 12 மணித்தியாலம் பிரயாணஞ் செய்த களைப்பு கால் விறைத்துப் போயிருந்தது. மெல்ல மெல்ல நடந்து பஸ் நிலையத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தேன். ஒருவர் ஓடிவந்து ஓட்டோ நிற்குது சார். எங்கே போகனும் சார் என்று கேட்டார் அந்த ஓட்டோக்காரன். ''சுரேந்திர நகர்'' என்று கூறினேன். என் பாக்கை வாங்கி அவர் சுமந்து கொண்டு வந்தார். பஸ் நிலையத்துக்கு வெளியே வந்து, தான் சுரேந்திர நகர் போவதாக மற்றைய ஓட்டோக்காரரிடம் கூறினார். உடனே மற்றைய ஓட்டோக்காரர் பயிவ் கிலோமீற்றர் ஸ்ரெயிட் லெப்ட் ரையிட் என்று ஆங்கில வார்த்தைகளைக் கூறி வழி கூறினார்கள். எனக்குக் கோபம் பொத்திக்கொண்டு வந்தது. இதென்ன தமிழ் நாட்டிலே இவர்கள் அதிகமாக ஆங்கிலச் சொற்களைப் பாவிக்கின்றார்கள். எனக்கு யாழ்ப்பாணத்தில் இலக்கியக் கூட்டங்களில் பேச்சாளர்கள் தமிழ்நாட்டில்

அதிகம் ஆங்கிலச் சொற்கள் பாவிக்கப்படுவதை உதாரணமாகக் காட்டி நக்கல் அடித்து பகிடியாகப் பேசுவது ஞபகம் வந்தது. நான் ஓட்டோவில் ஏறி அமர்ந்து கொண்டேன். ஓட்டோ மெதுவாக சென்று கொண்டிருந்தது. அலுப்புத் தட்டிய பஸ் பிரயாணத்தை ஞாபகப்படுத்தினேன். பத்து வருடங்களாக சினிமாப்படம் பார்க்காத எனது விரதத்தைக் கைவிடவேண்டியதை நினைத்தேன். என்றாலும் பாரதி படத்தை வீட்டில் கொம்பியூட்டரில் பார்த்தது ஞாபகம் வந்தது. பஸ்சில் இரண்டு படம் போட்டார்கள். தஞ்சைப் பெரிய கோவிலை நேரில் பார்த்த பிரமிப்பு என் மனதில் வந்தது. இந்தியாவிலே பெரிய சிவன் கோவில் என்ற கூறப்பட்டது. 7ஆம் நூற்றாண்டில் இராசஇராச சோழன் கட்டியது. ஒரு நாள் தான் தஞ்சாவூரில் தங்கினேன். திருவையாறு செல்லவில்லை. ஒரு முடக்கில் ஓட்டோக்காரன் ஓட்டோவை நிற்பாட்டினான். தெருவில் ஒரு பிச்சைக்காரனை வழிகேட்டார். ஸ்ரெயிட் லெப்ட் ரைட் என்ற ஆங்கில வார்த்தைகளையே பாவித்து மறுமொழி கூறினான். பிச்சைக்காரனும் ஆங்கிலம் பேசியது எனக்கு அதிசயமாக இருந்தது. ஒருவாறு நான் கொடுத்த வீட்டு நம்பரைத் தேடிக் கண்டுபிடித்து ஓட்டோக்காரன் நிற்பாட்டினான். இறங்கி விசாரித்த பொழுது அது மீசாலையில் எனது பக்கத்துவீட்டு

செல்லண்ணருடைய வீடாகத்தான் இருந்தது. கிளிநொச்சியில் இருந்து கடலால் வந்த குடும்பம் ஒன்று அங்கிருந்தது. கல்வயல் பெடியன் அவர். ஒரு பெண்ணைத் திருமணம் செய்திருந்தார். "ஏன் பேசும் பொழுது ஆங்கிலச் சொற்களையே எல்லோரும் பாவிக்கின்றீர்கள்? தமிழ்ச் சொற்களைப் பாவித்தால் என்ன?" என்று ஓட்டோக்காரனைப் பார்த்துக் கேட்டேன். ஓட்டோக்காரர் சிரித்துவிட்டு,

"அட நீங்கள் தமிழா சார்? யாழ்ப்பாணமா சார்? இங்கு பல மாநிலத்தவரும் வருவார்கள் சார். வேற்றுநாட்டுக்காரரும் வருவார்கள். ஆங்கிலச் சொற்களைப் பாவித்தால் அவர்களும் விளங்கிக் கொள்வார்கள். இல்லாவிட்டால் நீங்கள் இங்கு வரும் வரை பயத்துடன் தான் இருந்திருப்பீர்கள். எனது வீடு பக்கத்துத் தெருவில் தான் இருக்கிறது" என்றார். எனக்கு அசடு வழிந்தது. செந்தமிழ் நாடெனும் போதினிலே என்ற பாட்டை இராகத்தோடு பாடினார் அந்த ஓட்டோக்காரர். இந்தப் பாட்டு பாரதியார் ஒரு போட்டிக்கு எழுதிய பாட்டு. அதற்கு இரண்டாம் பரிசு தான் கிடைத்தது என்று மாஸ்டர் யாழ் இந்துக் கல்லூரியில் படிக்கும் பொழுது கூறியது ஞாபகம் வந்தது.

## நன்றும் தீதும் பிறர் தர வாரா

நிலவரைலயைக் கடந்து விட்டேன். சுமாரான வேகத்தில் சைக்கிளை உளக்கிக் கொண்டிருந்தேன். எனக்கு சமாந்தரமாக இன்னும் ஒருவர் வந்து கொண்டிருந்தார். பின்னுக்கு மூன்று வாழைக்குலைகளைக் கட்டியிருந்தார். அவர் வங்கியின் வாடிக்கையாளர். சின்ன வயதில் தேங்காய், மாங்காய், பலாக்காய் மீசாலையில் இருந்து சாவகச்சேரிச் சந்தைக்குக் கொண்டு போய் விற்றது ஞாபகம் வந்தது. தூரத்தில் ஒருவர் றோட்டு ஓரத்தில் இருந்து கைகாட்டி மறிப்பது தெரிந்தது. ''ஐயா உங்களைத் தான் மறிக்கிறார் போலத் தெரியுது...'' என்று கூறிவிட்டு மற்றவர்கள் சைக்கிளை உளக்கிக் கொண்டு போனார். சைக்கிளைச் சிலோ பண்ணி நிற்பாட்டினேன்.

''சேர், ஐயாவுக்கு கடுமையாய் சுகமில்லை. என்னென்று பென்சன் எடுக்கிறது?'' என்று கேட்டார். ஏங்கட வீட்டுக்கு முன்னாலை வரச்சொல்லுங்கோ

என்றேன். அவர் தகப்பனை வீட்டுக்கு முன்னால் அழைத்து வந்தார். நாள் அடையாள அட்டை வாங்கிப் பார்த்தேன். "ஒருவருக்கும் சொல்லாதேங்கோ. நான் காசை எடுத்துத் தாறன்" என்று கூறினேன். தூரத்தில் கனபேர் கும்பலாக நிற்பது தெரிந்தது. என்ன அதில கன சனம் நிற்கினம்? என்று கேட்டேன். "அது அதில யாரோ சைக்கிள் போகேக்கில ஒரு குழந்தைப் பிள்ளை ஓடிவந்து குறுக்க சைக்கிளில் அடிப்பட்டுப் போட்டுது. அது தான் அந்த ஆளை மறிச்சு பிரச்சின எடுக்கினம்" என்றார். புதிய கிளைக்கு வந்து சிலநாட்கள் தான் ஆகியிருந்தது. நான் சைக்கிளை உளக்கிக் கொண்டு போனேன். சுன்னாகம் சந்தியை அடைந்த போது வாமதேவா, வசுவிற்கு ஆயத்தமாக நின்றார். அவர் சாவகச்சேரிக்கிளை முகாமையாளர்.

"நீங்கள் நேரத்திற்கு வந்துவிட்டீர்கள்" என்றார்.

"ஆம்" என்று நான் கூறிவிட்டு வங்கியை நோக்கிச் சென்றேன். சுமார் ஐம்பது பேர் வங்கிக்கு முன் காணப்பட்டனர். உள்ளுக்குச் சென்றேன். "சேர் ஊரெழுவில் அந்தச் செத்த ஆளில்ரை பென்சாதி வந்து வெளியில நிற்குது" என்றான் பீயோன். "எங்க பார்ப்பம்" என்று வெளியில் சென்றேன். "இவதான்" என்று ஒரு பெண்ணைக் காட்டினான் பீயோன். "ஏன் அந்தக் காசை எடுக்கல்ல" என்று கேட்டேன். "ஒரு

மகன் மலைநாட்டில் கடையில நிற்கிறான். இவை எல்லாப் பிள்ளைகளின் பெயரிலும் கணக்குத் திறக்கச் சொல்லீனம்'' என்றது அந்தப் பெண்.

"உங்களுடைய பங்கை இன்றைக்கு எடுத்துக்கொண்டு போங்கோ. மலைநாட்டில் உள்ள மகனை அங்க ஒரு வங்கியில் கணக்கைத் திறக்கச் சொல்லுங்கோ'' என்றேன் நான்.

வாடிக்கையாளர்கள் நிற்கும் பகுதிக்குப் போனேன். வரவர எண்ணிக்கை கூடிக்கொண்டே போனது. நான் அங்கே உள்ள ஒரு மேசையில் வைத்து பென்சன் வவுச்சரைப் பெற்று றிசீற்ரைக் கொடுத்துக் கொண்டிருந்தேன். வங்கி திறந்ததும் உள்ளே போய் வேலையைத் தொடர்ந்தேன். ஊழியர் பற்றாக்குறை. "இராமசாமி ஐயா கோயில் திருவிழாவுக்கு லீவு எடுத்தவர்'' என்றான் பீயோன்.

''கோயிலுக்கு என்று ஒரு நாளும் நான் லீவு எடுத்ததில்லை'' என்றேன் நான்.

''வார வெள்ளிக்கிழமை உங்கட ஆவரங்கால் சிவன் கோயில் தேரெல்லோ'' என்று கேட்டார் பாலகுமாரன். இவர் குரும்பசிட்டியைச் சேர்ந்தவர். வங்கியில் விவசாய அதிகாரி. ''கோயில் திருவுழாவுக்கென்று ஒரு நாளும் நான்

லீவெடுத்ததில்லை. செய்யும் தொழிலே தெய்வம்'' என்றேன் நான். மனேஜர் வந்தார். ''பலர் கொழும்பிற்குப் பெரிய ஆட்களைப் பிடித்துப் போயினம். சிலர் நாட்டை விட்டே போயினம்'' என்றேன் நான். ''கெதியாய் புதிய ஆட்களை எடுக்கப் போயினம்'' என்றார் அவர்.

''வடமாகாணத்திற்கு என்று எடுத்தவர்கள் உடனேயே இடமாற்றம் எடுத்துக் கொண்டு கொழும்பிற்குப் போகிறார்கள்'' என்றேன் நான். அவர் ஒன்றும் போசவில்லை. ''என்.எம். காலத்தில் தான் போதியளவு ஊழியர்கள் வங்கியில் இருந்தார்கள்'' என்றேன் நான். ஜெனரேட்டர் சத்தம் பெரிதாய்க் கேட்டுக் கொண்டிருந்தது. முன்பெல்லாம் லக்சபானா மின்சாரம் யாழ்ப்பாணத்திற்கு வந்தது. இப்ப ஒன்றும் இல்லை. கட்டிடம் தந்தவர்கள் புண்ணியவான். அடிப்படை வசதிகள் உட்பட எல்லாம் நன்றாக இருந்தன.

மாலை வந்தது. மெதுவாகச் சைக்கிளை உளக்கிக் கொண்டு போனேன். றோட்டில் சூடு தணியவில்லை. ஊரெழு சந்தியைக் கடந்துவிட்டேன். ஒரு சின்னப்பிள்ளை றோட்டிற்குக் குறுக்கே ஓடிவந்தது. எனது முன்சில்லில் மோதி விழுந்தது. எனக்குப் பயத்தால் நடுங்கத் தொடங்கியது. வேலை செய்த

களைப்பு வேறு. பலர் கிட்ட ஓடி வந்தார்கள். வாழைக்குத் தண்ணீர் மறித்துக் கட்டிக்கொண்டு நின்ற ஒரு பெண் ஓடி வந்தாள்.

“இஞ்சாருங்கோ, பிள்ளையளை றோட்டிலேயே விளையாட விடுகிறது,? சேருக்குக் கிட்ட ஒருதரும் போகக்கூடாது; சேர் நீங்கள் போங்கோ” என்றாள் அந்தப் பெண்.

அவள் வேறுயாருமில்லை காலையில் நான் வங்கியில் உதவிய பெண்தான்.

**வாளை மரங்களை வழி நெடுக**
**தோளை கொடுத்து வேலை செய்யும் – மகளிர்**
**காளை பமயன்கள் தெருவிலே**
**நாளை நன்றே விடியுமா?**



## வரப்பிரசாதங்கள்

“நீங்கள் மிக அழகாக இருக்கிறீர்கள்” என்றாள் சாவித்திரி. இவர் ஒரு சிங்களப் பெண்மணி. உயரமாக மிகவும் அழகாக இருப்பார். எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. எனக்கு அப்பொழுது 45 வயது. நீளக்கை சேட்டுப் போட்டு டை கட்டியிருந்தேன். சேட் புதியதுதான். “உனது கணவர் கேள்விப்பட்டால் உனது வீட்டில் பெரிய சண்டைதான் வரும்” என்றேன் நான். “நான் எனது கணவருக்கும் கூறுவதுண்டு” என்று கூறினாள். சாவித்திரி சிரிக்கும் பொழுது சிவப்பு நிறம் மேலும் அழகானது. அவளின் பெண்பிள்ளை சாமத்தியப்பட்ட பொழுது அவளின் வீட்டில் நடந்த நிகழ்விற்குப் போனது ஞாபகம் வந்தது. எனது மனைவியும் பிள்ளைகளும் கொடூரமான யுத்தம் நடக்கும் யாழ்ப்பாணத்தில். என்னை மகிழ்ச்சிப் படுத்துவதற்காக சாவித்திரி அப்படிக் கூறினாள். மனேஜர் கூப்பிடுவதாகப் பியோன் வந்து கூறினான். நான் அவரின் அறைக்குச் சென்ற பொழுது அவருக்கு முன்னால் 40 வயது மதிக்கத்தக்க ஒருவர் இருந்தார்.

"இவர் மிஸ்டர் வேணுகோபால். இவருக்கு டிக்கோயாவில் ஒரு சிறிய தேயிலைத் தோட்டம் இருக்கிறது. ஒரு சிறிய கடன் கொடுக்கப் போகிறோம். நீங்கள் இவருடன் போய் அவருடைய தேயிலைத் தோட்டத்தைப் பற்றி சிறிய அறிக்கை தாருங்கள்" என்று மனேச்சர் கூறினார். நான் முன் சீற்றில் அமர்ந்திருந்தேன். வேணுகோபாலன் பின்னால் இருந்தார். மலைச்சாரலில் றோட் வளைந்து வளைந்து போனது. காசல்றே நீர்த்தேக்கம் வற்றியிருந்தது. அவருடைய தேயிலைத் தோட்டத்திற்குப் போய்ச் சேர்ந்தோம். "எங்கே ஒப்பீஸ்" என்று கேட்டேன். "அப்படி எதுவும் கிடையாது சார், எனது பங்களாவில் வைத்துத்தான் கணக்குகள் எழுதுவோம்" என்று தனது வீட்டைக் காட்டினார். வீடு யாழ்ப்பாண நடுத்தர மக்களுடைய வீடு போல் இருந்தது.

"கணக்குப் புத்தகத்தைப் பார்ப்போமா?" என்று கேட்டேன். அதெல்லாம் எதற்கு சார் மனேச்சர் கடன் தருவதாய் கூறியிருக்கிறார்" என்று கூறினார் வேணுகோபால். "கடைசியாகக் கட்டிய மின்சார பில்லைக் காட்ட முடியுமா?" என்று கேட்டேன்.

"இதெல்லாம் ஏன் கேட்கிறீர்கள்" என்று கேட்டார் அவர்.

''சும்மா கேட்டேன்'' என்று மழுப்பினேன். ''பல வருடங்களாய் எனது மனசில் குடைந்து கொண்டிருந்த எனது ஆசையை வெளியிட்டேன். பெனடிக்காலனின் ''சொந்தக்காரன்'' என்ற நாவல் இன்னும் பல மலைய சிறுகதைகள், சி.வீ. வேலுப்பிள்ளை நாவல், எனது மனதில் வந்து போனது. ''நீங்கள் இங்கேயே நில்லுங்கள். நான் லயன் குடியிருப்பில் ஒரு தோட்டத் தொழிலாளியின் வீட்டிற்குச் சென்று உரையாடப் போகிறேன். நீங்கள் பயப்பட வேண்டாம். உங்களுடைய கடன் உங்களுக்குக் கிடைக்கும்'' என்று கூறினேன். ''அய்யய்யோ அங்கே போகாதேங்க சார். அவங்க அதை விரும்பமாட்டாங்க சார்'' என்று தடுத்தார். எனது மனக்கோட்டை எல்லாம் சடசடவென இடிந்து விழுந்தது. நான் அதைக் காட்டிக் கொள்ளவில்லை. நான் வாகனத்தில் போய் ஏறினேன். ''கோபமா?'' என்று கேட்டார் வேணுகோபால். நான் ''இல்லை இல்லை'' என்று கூறிச் சிரித்து மழுப்பினேன்.

''உமக்குக் கடன் கிடைக்கும் பயப்பட வேண்டாம்'' என்றேன். நான் வங்கிக்குச் சென்ற சில நிமிடங்களில் எனக்குக் கொழும்பில் இருந்து ஒரு கோல் வந்தது. கிழக்குப் பிராந்தியக் காரியாலயத்தில் இருந்து நண்பர் தனபாலசிங்கம் பேசினார். இவருக்கும் எனக்கும் ஒரே வயது. என்னுடன் யாழ்

இந்துக்கல்லூரி விடுதியில் இருந்தவர். குட்டி என்று தான் பாடசாலையில் அழைப்போம். உயரம் குறைந்தவர். ''மச்சான் எனது உறவுப் பெண்ணுக்கு உங்கே ரீச்சர் வேலை கிடைத்திருக்கிறது. முதலில் ஹற்றன் ஸ்ரீபாத கல்லூரியில் ஒரு கிழமை பயிற்சி கொடுக்கப் போகிறார்கள். அவ நிறைமாதக் கர்ப்பிணி. ஒருக்காப் பார்த்து ஏதாவது உதவி செய்'' என்று கூறினார்.

அடுத்த நாள் சனிக்கிழமை விடுமுறை என்றபடியால் வசதியாய்ப் போய்விட்டது. நான் தலவாக்கொல்லையில் பஸ்சில் ஏறி என்னை உரிய இடத்தில் இறக்கிவிடும்படி கண்டக்டரிடம் கூறினேன். சிறிது தூரம் நடக்க வேண்டியிருந்தது. றோட்டு வளைந்து வளைந்து போனது. மேலேயும் கீழேயும் மலைச்சாரல். தேயிலைச் செடிகள் அழகாக இருந்தன. நான் கல்லூரியை அடைந்த பொழுது அங்கு நின்ற காவலாளி என்னை அடையாளம் கண்டு கொண்டார். ''என்ன சார், ஏன் வந்தீர்கள்'' என்று கேட்டார். நான் விடயத்தைக் கூறியபொழுது அவர் தூரத்தில் இருந்த ஒரு பங்களாவைக் காட்டி அங்கே அந்த ரீச்சரின் தகப்பன் நிற்பதாகக் கூறினார். நான் அங்கு சென்று விடயத்தைக் கூறியபொழுது எல்லா உதவிகளும் கிடைத்திருப்பதாக நன்றி கூறினார்.

நான் மீண்டும் தெருக்களில் நடக்கத் தொடங்கினேன். தோட்டக் குடியிருப்புகள் மலைச்சாரலில் தென்பட்டன.

ஒரு வாகனம் எனக்கு அருகில் வந்து நின்றது. எங்கள் வங்கிக்கு வரும் தோட்டத்துரை அமர்ந்திருந்தார். "என்ன விடயம் இங்கே" என்று கேட்டார். தான் ஹற்றனுக்குப் போவதாகவும் என்னை வாகனத்தில் ஏறுமாறும் கேட்டார். நான் சிறிது தூரம் நடந்து இடங்களைப் பார்க்க விரும்புவதாகக் கூறினேன். அவர் போய்விட்டார்.

நான் தெருவில் மீண்டும் நடந்து கொண்டிருந்தேன். மேலே இருந்து என்னைக் கண்டு ஒற்றையடிப் பாதையில் ஓடிவந்தார் ஒருவர். "சார் வாங்கோ எங்கள் வீட்டிற்கு" என்று அழைத்தார் அந்த ஆசிரிய இளைஞன். அவர் மலையகத்தைச் சேர்ந்தவர். வங்கிக்குப் பலமுறை அவர் வந்திருந்தார். அவருடைய தகப்பன் ஒரு தோட்டத் தொழிலாளி.

எனக்கு மகிழ்ச்சி தாங்கமுடியவில்லை. எனது நீண்ட நாள் கனவு நனவாகியது. அவருடைய வீடு தோட்டத் தொழிலாளிகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டு வரும் நவீன வீடுகளில் இரட்டை வீடுகளில் ஒன்றாக இருந்தது. அங்கு போனபொழுது எனக்குப் பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. பெரிய செற்றி, சோபா, ரீவி,

பெரிய நவீன றேடியோ எல்லாம் இருந்தது. "ஏது இவ்வளவு காசு" என்று கேட்டேன். "சார் அம்மாவுடைய பிறவிடண்ட் கிடைத்தது. அப்பா தான் இதெல்லாம் வாங்கினார். நகை ஆபரணங்கள் வாங்கினால் அடைவு வைக்க இரவல் கேட்பாங்கள்" கடைசியில் ஒன்றும் மிஞ்சாது என்று நியாயப்படுத்தினார்.

திங்கட்கிழமை வங்கியில் உள்ள பலரிடம் விடயத்தைக் கூறினேன். பிறவிடண்ட் திட்டத்தை இலங்கையில் அறிமுகப்படுத்திய பிரதமர் யார் என்று கேட்டபொழுது யாருக்கும் அது தெரிந்திருக்கவில்லை. பெண்களும், ஆண்களுமாகக் கிட்டத்தட்ட 10 பேர் தமிழர்கள் அங்கே வேலை செய்தார்கள். "நீங்கள் யாராவது ஒரு தோட்டத் தொழிலாளி வீட்டிற்குச் சென்றிருக்கிறீர்களா?" என்று கேட்டபோது யாரும் பதில் கூறவில்லை.

மேகம் முட்டும் மலை
தோடு தெரியும் காலையில்
கூடு தொங்கும் தோழில்
தேடுவது செலவாணி

## நல்லதோர் வீணை செய்தே

"என்ன ஐயா விடியற்காலமை அவசரமாய் ஏதோ கடிதம் பென்சிலாலை எழுதிறியள்" என்று கேட்டார் பியோன். "வாற வழியில எங்கடை வங்கிக் கிளையில் கடன் எடுத்துக் கட்டாதவரிட்ட போனனான். இருபாலையில் அவருடைய வீடு. வரேக்க முடிந்தளவு காசு கொண்டு வரும்படி எழுதுறன். இதை டைப்பிஸ்ட் வந்தவுடனே ரைப்படித்து கடிதத்தை மனேச்சரிட்டை கையெழுத்துக்குப் போட்டால் நான் காலமை கடன் காறிட்டைப் போனது அறிந்தால் மனேச்சர் சந்தோஷப் படுவார். நான் வாடிக்கையாளரிட்டைப் போனதுக்கு ஒரு ரைக்கோட்டும் இருக்கும்" என்றேன் நான். நான் நினைத்த மாதிரி மனேச்சர் கூப்பிட்டுப் பாராட்டினார்.

"சேர் அவரிட்டை ஒரு பெரிய வான் இருக்குது. எங்கே வாங்கினாய் என்று கேட்டதற்கு திருமலையில்

வாங்கினதாகச் சொன்னார். எனக்கு நல்ல ஞாபகம் அங்கு ஒரு தனியார் வங்கியில் கடன் எடுத்த ஒரு வியாபாரியிடம் அந்த வான் நின்றது. அந்த வியாபாரி இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு அவர்களுடைய வங்கியில் எடுத்த கடனைக் கட்டவில்லை. அந்த வங்கிக்காரர் மெல்ல இந்த வானை விற்பித்து தங்கடை கடனை அறவிட்டார்கள். இந்தளவுக்கும் அந்த வங்கியில் வான் வங்கிக்கு ஈடு வைக்கப்படவில்லைப் பார்த்தீர்களா? அவர்களின் கெட்டித்தனத்தை'' என்றேன் நான்.

''மரத்தாலை விழுந்தவனை மாடு ஏறிமிதித்த கதைதான்'' என்றார் மனேச்சர். தாங்கள் எழுதிய கடிதங்களை எடுத்துக்கொண்டு பலர் வந்தனர். மேலும் விபரங்களைக் கேட்டனர். சிலர் ஒரு பகுதி காசைக் கட்டினார்கள். சில தபால்கள் திரும்பி வந்தன. அவர்களின் தற்போதைய இருப்பிடத்தை மற்ற ஊழியர்களிடம் அறிய முயன்றேன்.

சில வாரங்கள் செல்லப் பெரிய போர் மூண்டது. எல்லாரும் இடம்பெயர நேரிட்டது. அரச காரியாலயங்கள், வங்கிகள் இயங்கவில்லை. இந்திய இராணுவம் யாழ் நகரின் முக்கிய தெருக்களை, நகரங்களைக் கைப்பற்றியது. எங்களை வேலைக்கு

வருமாறு றேடியோவில் கூறப்பட்டது. பொருட் தட்டுப்பாடு நிலவியது. பணத்தட்டுப்பாடும் நிலவியது. வேலைக்கு வந்தபொழுது அரைவாசிப்பேர் மட்டுமே வேலைக்கு வந்திருந்தனர். அட்வான்ஸ் எடுப்பதற்கு வங்கியில் காசு இருக்கவில்லை. வெளியில் யுத்த டாங்கிகள் அணிவகுத்துச் செல்லும் சத்தங்கள் கேட்டது.

"இந்தக் கஷ்ரத்துக்கை கடன் கட்ட ஒருதரும் வராயினம். நீர் நடைமுறைக் கணக்குப் பகுதியில் வேலை செய்யும்" என்று மனேச்சர் கூறினார். வேலையைத் தொடங்கினேன். சிறிது நேரத்தில் எனக்கு முன்னால் ஒரு பெண்மணி வந்து உட்கார்ந்தார். "என்ன விடயம்" என்று கேட்டேன். "சேர் என்ரை கணவர் சவுதியில் இருந்து வந்திட்டார். நான் அந்தக் கடனை வட்டியோடை கட்ட வந்தனான்" என்றாள் அந்தப் பெண். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. எல்லாரும் காசுக்குக் கஷ்ரப்பட அந்தப் பெண்மணி காசுடன் வந்தது வியப்பாக இருந்தது. நாங்கள் தொடர்ச்சியாக அர்ப்பணிப்புடன் வேலை செய்த பலன் தான் இதுவென்று மனேச்சர் கூறினார். வேலை முடிந்து வெளியில் வந்தபொழுது அந்த றோட்டில் சில இரும்புக் கடைகள் திறந்திருந்தன. எங்கு பார்த்தாலும் இந்திய இராணுவத்தினர் காணப்பட்டனர்.

நீண்டு செல்லும் பிரச்சினைகள்
மாண்டவர் பலர்
கண்டம் பல சென்றனர்
மீண்டு வருவரா அவர்?

சேவை செய்தோம் நன்று
பாவையர் தனியே வீட்டில்
பொருள் பண்டம் தேடினோம்
சோகம் என்று மறையும்?



## காலையில் எழுந்தவுடன் படிப்பு

"சேர் இந்த செக்கை மாற்றி புஸ்தகத்தில் போட்டுத் தாருங்கள். இருபதாயிரம் காசாகத் தாருங்கோ'' என்றார் அந்த இளைப்பாறிய தோட்டத் தொழிலாளி. வெளியில் லேசாக வெயில் எறித்துக் கொண்டிருந்தது. மத்தியானம் ஆனால் மழைபெய்யத் தொடங்கும். வருடத்தில் ஒன்பது மாதம் மழை பெய்யும். மூன்று மாதம் வரட்சி தான்.

பிரவிடண்ட் பண்ட் செக் அது. "போம் நிரப்புவீர்களா? எழுதத் தெரியுமா...?'' என்று கேட்டேன். "தெரியாது சார்'' என்பது நான் எதிர்பார்த்த பதில் தான். "கையெழுத்துப் போடுவீர்களா...?'' என்று கேட்டேன். "நான் கையெழுத்துப் போடுவேன். இவ கைநாட்டுத்தான்'' என்று மனைவியைக் காட்டிக் கூறினார். உங்களுக்குப் பெயர் என்ன என்று மனைவியைப் பார்த்துக் கேட்டேன். "பாவாடை சார்'' என்றார் அந்தப் பெண்மணி. எனக்கு அதிசயமாக

இருந்தது. ''பாவாடையா'' என்று திருப்பிக் கேட்டேன். ''ஆமாம் சேர்'' என்று உறுதிப்படுத்தினார் அந்தப் பெண்மணி. ''எவ்வளவு காசு இப்போதைக்கு வேண்டும்'' என்று கேட்டேன். ''இருபதாயிரம்'' என்பது பதில். ''ஏன் சின்ன வயதில் படிக்கவில்லை'' என்று பெண்மணியைப் பார்த்துக் கேட்டேன். ''யாழ்ப்பாணத்தில் வீட்டு வேலைக்காரியாக நின்றேன்'' என்றாள் அந்தப் பெண். எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. முன்னரங்க ஊழியர் ஒருவரை ஒழுங்கு செய்து அவர்களுடைய வேலையை முடித்தேன். போகும் போது ''நன்றி'' சொல்லிவிட்டுப் போனார்கள். ''நான் சின்ன வயதில் தொண்டமனாறு சந்நிதி கோயில்லே கடலை வித்தேன். நீங்கள் யாழ்ப்பாணம் போகேக்கை நானும் வறேன்''. உன்னை ஓமந்தைச் சாவடியில் பிடித்து வைத்து விடுவார்கள். அது எனக்குப் பிரச்சினை'' என்றேன் நான்.

மாவட்ட முகாமையாளர் வந்தார். ''உங்கள் இடமாற்றம் விடயம் எப்படி? யூனியன்காரரை தொடர்பு கொண்டீர்களா...? உங்கள் மனைவி பிள்ளைகள் யாழ்ப்பாணத்தில் பாவம். நீங்கள் கஷ்ரப்படுகிறீர்கள்?'' என்று நச்சரித்தார். ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுத கதைதான். வேர் ஊண்டி விடப்படாது என்பது அவரின் கவலை. எனது இடத்தில் இருந்து ஐந்து

யார் தூரத்தில் தான் கமலாவின் கதிரை. இவர் மலையகத் தமிழ்ப் பெண்.

"பாவாடை என்று ஏன் இங்கே பெயர் வைக்கிறார்கள்" என்று கேட்டேன். "பிறக்கும்போதே பாவாடை கட்டிக்கொண்டு பிறந்திச்சாம்" என்று கூறிவிட்டுக் கடகடவென்று சிரித்தாள் கமலா. சரியாக மஞ்சுவைப்போல இருப்பார். ஆனால் கறுப்பு நிறம். கல்யாணம் ஆகிச் சில மாதங்கள் தான் ஆகியிருந்தது. அதனால் அவர்களுடைய முகத்தில் புதிய மினுமினுப்பு தெரிந்தது. "83 கலவரத்தைப் பற்றி ஒரு ஜோக் சொல்வார்கள் தெரியுமா?" என்று கேட்டார். "தெரியாது. சொல்லுங்களேன்" என்றேன். பனங்கொட்டைக்கும் பலாக் கொட்டைக்கும் சண்டை நடந்திச்சாம். இடையில் தேயிலைக் கொட்டை அகப்பட்டு நசிஞ்சு போச்சாம்" என்று கூறிவிட்டு மீண்டும் சிரித்தார்.

அடுத்தநாள் காலையில் வங்கி திறந்தவுடன் அவர்கள் இருவரும் மீண்டும் என்னை நோக்கி வந்தார்கள். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. "என்ன" என்று கேட்டேன். "சேர் இருபதாயிரம் காசு எடுக்க எழுதிக்கொடுத்து இரண்டாயிரம் ரூபாதான் தந்தார்கள்" என்று கூறினார்கள். ரூபா இருபதாயிரம் எடுக்கும் சிறிய படிவத்தில் கையெழுத்துப் போட்டு

உறுதிப்படுத்தியது ஞாபகம் வந்தது. காசாளர் களவு செய்திருக்கமாட்டார். "காசைக் கொண்டந்தீர்களா?" என்று கேட்டேன்.

"ஆமாம் சார்" என்று காசை எடுத்துத் தந்தார்கள். எண்ணிப் பார்த்த பொழுது 500 ரூபா தாள்கள் ஒரு மடிப்பு இன்னும் ஒரு மடிப்பு அப்படி இருந்தது. ரூபா இருபதாயிரம் சரியாக இருந்தது. "என்ன காசு சரியாக இருக்கிறதே" என்று கேட்டேன்.

"அப்படியா? சார்" என்று அப்பாவித்தனமாகக் கேட்டார்கள்.



## ஓடி விளையாடு பாப்பா

விடிந்து கொண்டிருந்தது. இன்னும் முற்றாக விடியவில்லை. நான் இருட்டிலே நின்றபடி பத்திரிகையை மேலோட்டமாக தலையங்கங்களையும், மரண அறிவித்தல்களையும் பார்த்துக் கொண்டிருந்தேன். வழக்கமாக தேனீர் கடை வாசலிலே நின்றபடியே பார்த்து விடுவேன். இன்று அங்கே சனநெரிசல். போயா விடுமுறை. தென்பகுதி சிங்களவர்களால் தேனீர்க்கடையும், சுற்றாடலும் நல்லூர் கந்தசுவாமி கோயிலடியும் நிரம்பி வழிந்து கொண்டிருந்தன. பக்கத்திலே ஐயர் வீட்டிலே ஓங்கி உயர்ந்து சடைத்து வளர்ந்த பலாமரங்களில் இருந்து விழுந்து பலா இலைகளை ஒரு கம்பியால் குத்திக் கொண்டிருந்தான் சுகந்தன். அவனது வயதை ஒத்த இன்னுமொரு பையன் சைக்கிளில் வந்தான். லேடீஸ் சைக்கிளில் இருந்து வசதியாகச் சீற்றில் இருந்து இறங்கி இரண்டு பக்கமும் கால்களை ஊன்றிக்கொண்டு உரையாடினான். ''சுகந்தன் அந்தப் பெரிய பாரதி

பாடல் புத்தகத்தை ஒருக்கால் பள்ளிக்கூடத்துக்குக் கொண்டுவாறியே? டேய் அதில இருக்கின்ற பாட்டுக்களைப் படித்தால் நாங்களும் பாட்டு எழுதலாம் போலிருக்குது'' என்றான். ''மோகன் ஏன் உன்ரை அப்பாட்டைக் கேளன் ஒரு புத்தகம் வாங்கித் தரச்சொல்லி'' என்று சொன்னான் சுகந்தன். ''அப்பா சொல்லுறார் உதொண்டும் படிக்கத் தேவையில்லை என்று. பயிற்சிப் புத்தகம் படித்தால் போதுமாம்'' என்று சலித்துக் கொண்டான். ''உனக்கென்ன பின்நேரம் வாசிக சாலையடியில் விளையாடுவாய். எனக்கு விடிஞ்சா பொழுதறிய ரியூசன் தான். இரவில வீட்டில ஒரே ரீ.வி. போடுவினம். வீட்டில் படிக்கவும் ஏலாது'' என்று சொல்லிவிட்டு சைக்கிளை உளக்கிக் கொண்டு போனான். நான் அந்தப் பையனுக்குக் கிட்டைப்போய் ''தம்பி நீ ரியூசனுக்குப் போறதில்லையோ'' என்று கேட்டேன். ''எனக்கு அப்பாவும் அம்மாவும் தான் வீட்டுப்பாடம் சொல்லித் தாறவை'' என்று கூறினான் சுகந்தன். சுகந்தனின் தகப்பனை எனக்குத் தெரியும். யாழ் மாநகரசபைச் சிற்றூழியர். இலக்கியக் கூட்டங்களில், புத்தக வெளியீட்டு விழாக்களில் கண்டு பழக்கம். நான் வீட்டுக்குப் போய் பேப்பரைப் பிள்ளைகளிடம் கொடுத்துவிட்டு காலைக்கடன்களை முடித்துவிட்டு காலைச் சாப்பாட்டைச் சாப்பிட்டுவிட்டு கந்தோருக்குப் போனேன். கந்தோர் சனக்கூட்டத்தால்

நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. ஒரு குழந்தை வீரிட்டுக் கத்திக் கொண்டிருந்தது. இரண்டு வயதிருக்கும். ஒரு குழந்தையை ஒரு தாய் வைத்திருந்தாள். ஒரு பெண் ஊழியரைக் கூப்பிட்டு "அந்தப் பிள்ளையையும் தாயையும் கூட்டிவாரும் என்னவென்று பார்த்து கெதியாக அனுப்புவம்" என்று கூறினேன். உள்ளுக்குள் வந்த அந்தத் தாயிடம் "ஏன் வீட்டில அக்கம் பக்கத்தில பிள்ளையை விட்டுட்டு வர வசதியில்லையோ?" என்று கேட்டேன். "இல்லை" என்று அந்த வாடிக்கையாளர் கூறினார். அந்தப் பெண் வந்தவிடயத்தை முடித்து அனுப்பிய பின் பெண் ஊழியர் கூறினார் "சேர் பெண்கள் தனியாய் வந்தால் எத்தினை பேர் எத்தினை சொல்லுவினம். இப்ப பாத்தியளே நீங்கள் அனுதாபப்பட்டு கெதியாய் அலுவலை முடிச்சுக் கொடுத்திட்டியள்" என்றார். "சமாதானம் வாறதுக்கு முன்பு எவ்வளவு கரைச்சல். ஆமி செக் பொயிண்டில் தப்புவதற்கு எல்லோரும் கைக்குழந்தைகளை கொண்டு திரிந்தினம்" என்றார் கிட்ட நின்ற இன்னுமொரு வாடிக்கையாளர்.

மத்தியானச் சாப்பாட்டுக்குப் பின்பு பார்த்தேன் ஒரு சிறு பையன் வாடிக்கையாளர் பகுதியில் உள்ள வாங்கில் தூங்கி வழிந்து கொண்டிருந்தான். செல்வியின் மகன் அவன். ரவுண் பாடசாலை முடிந்து வந்திருந்தான். பின்னேரம் கன்ரீனுக்கு ரீ குடிக்கப்

போனேன். செல்வி மகனுக்கு ரீ வாங்கி குடிக்கக் கொடுத்துக் கொண்டிருந்தா. ''ஏனப்பா குழந்தைப் பிள்ளைகளை போட்டு வதைக்கிறியள். நுணாவில்ல உள்ள பள்ளிக்கூடத்தில படிப்பிக்கிறது தானே'' என்றான் சிவபாலன். இவன் தொழிற்சங்கவாதி. ''சின்னப்பிள்ளைகள் குறைந்தது ஒரு மணித்தியாலம் வெயிலிலை விளையாட வேணுமாம். அந்த சூரிய ஒளியில விற்றமின் D3 உற்பத்தியாகுதாம். இந்த D3 குறைபாட்டால் பல நோய்கள் உண்டாகுதாம்" என்று தொடர்ந்தான் சிவபாலன்.

நீர் மாத்திரம் ரவுணிலை மகனை நல்ல பள்ளிக்கூடத்தில் படிப்பிக்கின்றீர். நாங்கள் ஊரில தமிழ் பள்ளிக்கூடத்தில் படிப்பிக்கிறது என்று சீறினாள் செல்வி. ''எனக்கு என்ரை மகனைப் பார்க்கப் பாவமாய் இருக்கு. மனிசி ஒரே ஆங்கிலப்பாட்டு பேச்சு வகுப்பெண்டு மகனை அனுப்பியபடி. அவன் அழுறான்'' என்றான் சிவபாலன். ''உந்த ஆங்கிலப் பாட்டில வாற சொற்கள் வழக்கில் இல்லாதவை. உந்த ஆங்கிலப் பாட்டுக்களைப் பாடமாக்கிறதால் எந்தப் பிரயோசனமும் இல்லை. நான் காரைநகரிலை தான் படிச்சனான். நீங்கள் சாவகச்சேரியிலை தானே படிச்சனீங்கள்'' என்று சொல்லிவிட்டு எழுந்து கந்தோருக்குள் போனான். நானும் எழும்பிப் போனேன். பல மாதங்களுக்குப் பின் நான் விடியும்

வேளையில் கேற்றைத் திறந்து கொண்டு காலை பேப்பர் வாங்கப் போனேன். சுகந்தன் பலாவிலை குத்திக்கொண்டு நின்றான். ஒரு புதிய சைக்கிள் நின்றது. "என்ன சுகந்தன் புது சைக்கிள் வாங்கியிருக்கிறாய் போல" என்று கேட்டேன். "ஓம் நான் ஸ்கொலசிப் பரீட்சையில் பாஸ். அதுக்கு சன சமூக நிலையத்தில் பரிசாகத் தந்தவர்கள்" என்றான் சுகந்தன்.

**போட்டி பரீட்சைகள்**
**போட்டி வாழ்க்கை**
**நீட்டி நடப்பவர் முன்னே**
**காட்டி மகிழ்வதும் கல்வி தான்.**



## திருப்பள்ளி எழுச்சி

நல்லூர் கந்தசுவாமி கோயில் கடிகாரம் நான்கு தரம் அடித்து ஒலித்தது. "எத்தனை மணி அடித்தது" என்றார் கேட்டார் மனைவி. "நான்கு" என்று பதில் கூறினேன். "சில நாளிலை மணிக்கூட்டு மணிச்சத்தம் கேட்பதில்லை" என்றார். விடியற்காலை 3½ மணியில் இருந்து சின்ன ஒலிபெருக்கியில் மணியடிக்கும் சத்தத்தை ஒலிபரப்புகிறார்கள். அப்பதான் பக்தர்கள் எழும்பிக் குளித்துவிட்டு கோவிலுக்கு வருவார்கள். பிள்ளையார் வாசலில் நிற்கும் ஐயர் வீட்டில் குளிக்கும் சத்தம் கேட்டது. முதல் நாள் மாலை கோவில் வாசலில் கண்ட காட்சி எனது மனதைக் குடைந்து கொண்டிருந்தது. தனது காசை எண்ணிக்கொண்டிருந்த இராமுவை நோக்கி "இஞ்சார் கொஞ்சக் காசை ஆனந்தியின்ரை தேத்தண்ணிக் கடையில் குடுத்தாயெண்டால் அவர் சும்மா தேத்தண்ணி சாப்பாடுப் பாசல் தருவார்" என்றேன்.

"அவர் வேண்டாமாம். குடுத்த காசு கிடக்காம். நாதன் கடையில் குடுத்தனான். அவரும் குடுத்த காசு கிடக்கெண்டு வேண்டாம் எண்டுட்டார்" என்றான்.

இதென்ன கோவில் வாசலில் சீவியம். உன்ரை வீட்டை போவன் என்றேன் நான். நேர்ஸ் ஊசி போட்டவா பாத்துத்தான் இன்னும் கொஞ்ச நாளுக்கு வாட்டில இருக்கச் சொன்னவர் என்றான். இராமு மனநோயாளி. ஆஸ்பத்திரி வாட்டில் இருப்பதாக அவன் நினைப்பு.

நல்லூர் கந்தசுவாமி கோவில் மணி ஓங்கி ஒலித்தது. நேரம் 4½ மணி. அதிகாலை. "ஏன் அதிகாலைப் பூசைக்குப் போகவில்லையே?" இது மனைவியின் கேள்வி. "இண்டைக்கு ஞாயிற்றுக் கிழமை. பகல் பூசைக்குப் போகலாம் தானே" என்றேன் நான். அதென்ன காலைப்பூசையில விசேஷம். கனதூரத்தில இருந்து கனபேர் வருகினம் என்று கேட்டார். காலைப் பூசையில் கேட்டதெல்லாம் கிடைக்கும் என்று ஒரு நம்பிக்கை. பள்ளியறையிலிருந்து முருகனை எடுத்து குருக்கள் விமானம் என்கிற சிறிய தேரில் வைத்து எல்லாரும் விமானத்தைத் தள்ளுவார்கள். அப்பொழுது எல்லோரும் முருகா முருகா என்றபடி இரண்டு கைகளையும் நீட்டி கெஞ்சுவார்கள். விமானம் உள்வீதி வலம் வந்து முருகனைக் கொண்டுபோய் மூலஸ்தானத்தில் வைப்பார் குருக்கள். அப்ப ஏதோ பாட்டெல்லாம் ஒலிபெருக்கியில் பாடிக்கேட்கும்" என்று கேட்டார் மனைவி.

ஓம் திருப்பள்ளியெழுச்சிப் பாடல் பாடித்தான் பள்ளி அறையை குருக்கள் திறப்பார். குருக்கள் கந்தரனுபூதியை, கந்தர் அலங்காரத்தை, தேவார, திருவாசகத்தை பக்தர்கள் பாடுவது பக்தியாக இருக்கும்'' என்றேன்.

கோவில் மணி ஓங்கி ஒலித்தது. நேரம் அதிகாலை 5 மணி. அவசரமாக வெளிக்கிட்டு பருத்தித்துறை வீதிக்கு வந்தேன். மூலஸ்தானத்தில் குருக்கள் தீபங்காட்டுவது தெரிந்தது. கோவிலுக்கு வெளியில் நின்ற பலர் கும்பிட்டார்கள். கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு சாமான் கொண்டு வரும் லொறிகள் வெறுமையாக செம்மணி றோட்டை நோக்கிப் போய்க்கொண்டிருந்தன. பின்னால் மோட்டார் சைக்கிளில் இரண்டு பேர் போய்க்கொண்டிருந்தார்கள். பின்னால் இராமு தனது உரப்பையைக் கொண்டு ஓடுறாங்கள் என்று திருப்பித் திருப்பிக் கத்திக்கொண்டு மோட்டார் சைக்கிளின் பின்னால் ஓடினான். ''பாவம் நித்திரையாய் கிடந்த அவன்ரை காசை யாரோ பறித்துக்கொண்டு ஓடுறாங்கள்'' என்றார் அதில் நின்ற ஒருவர். ''அவனுக்குத் திருப்பள்ளியெழுச்சி இப்படிப் போச்சு'' என்றார் இன்னுமொருவர்.

அந்த மோட்டார் சைக்கிளில் ஓடிய இருவரும் யார் என்பது பலருக்குத் தெரியும். அவர்கள் கோவில்

முன்றலில் அடிக்கடி காணப்படும் இளைஞர்கள். இது அடிக்கடி நடக்கும் சம்பவம்.

தூரத்திலே சங்கிலியன் மன்னன் வழிபட்ட சட்டநாதர் சிவன் கோவிலிலே மாணிக்கவாசகர் பாடிய திருப்பள்ளி எழுச்சி பாடல்கள் கேட்டது. நாயன்மார்கட்டு கோவிலிலே சீர்காழியின் குரலில் ஔவையார் அருளிய விநாயகர் அகவல் கேட்டது. பக்கத்திலே தேனீர்கடையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் அதிகாலை என்றும் இனியவை நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது. திருடாதே பாப்பா திருடாதே பாப்பா என்ற பாட்டில் திருடனாய்ப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்ற அடிகள் ஒலித்துக் கொண்டிருந்தது.

**விடியும் வேளை கோவிலிலே**
**விடிவு தேடி வரும் மாந்தர்**
**முடியும் வரை தொழுதால்**
**விடியுமா வாழ்க்கை.**

**நன்றும் தீதும் நாமே தேடுவது**
**நின்று கொடுக்கும் தெய்வம்**
**நன்று சேவை செய்க**
**மன்று புகழ் பெறுக.**

*

## தோழமை

"பின்னாலை மக்கள் வங்கி முகாமையாளர் இருக்கின்றார். அவரும் யாழ்ப்பாணம் தான். அவருடன் போய் பேசிப் பாருங்களேன்'' என்றார் முகம்மது. முகம்மதுவின் வீட்டில் ஒரு பகுதியில் தான் நான் குடியிருந்தேன். கிண்ணியாவுக்கு வந்து ஒருவாரம் தான் ஆகியிருந்தது. பிறக்கும்போது எமது முதல் மகள் இறந்துவிட்டாள். மனைவியும் என்னுடன் இருந்தார். மறுநாள் ஞாயிற்றுக் கிழமை காலை சாப்பிட்டுவிட்டு பின்னால் வீடுதானே என்று சாரத்துடன் அவர் வீட்டுக்குப் போனேன். வாசலில் நின்று என்னை அறிமுகப்படுத்தினேன் வாருங்கோ. இருங்கோ என்று என்னை வரவேற்றனர். "எந்தப் பல்கலைக் கழகத்தில் படித்தீர்கள் என்று அவரை நான் கேட்டேன். பேராதனையில் படித்தேன். நான் ஒரு புவியியல் சிறப்புப் பட்டதாரி. எனது மனைவி நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்தவர். அவருடைய அப்பா அனுராதபுரம் கச்சேரியில் ஓ.ஏ. (O.A.) ஆக

இருந்தவர்'' என்றார் முகாமையாளர். ''அவரை எனக்கு நன்றாகத் தெரியும். நானும் 1972 ஆம் ஆண்டு அனுராதபுரத்தில் வேலை செய்தேன்'' என்றேன். மிக வேகமாகவே சினேக உணர்வு வந்துவிட்டது போல் உணர்ந்தேன். வீட்டைவிட்டு வெளியால் போகும்போது எப்பொழுதும் ரவுசர் அணியுங்கள் என்றார் அவர். "எப்படி வேலை போகிறது'' என்று கேட்டார். ''முஸ்லீம்கள் பெயரை ஞாபகம் வைத்திருப்பது சிரமமாக இருக்கின்றது'' என்றேன் நான். "எப்பொழுதும் முழுப்பெயரையும் விலாசத்தையும் தெரிந்து வைத்திருங்கள். அவர்கள் இருப்பிடத்தையும் அறிய முயற்சியுங்கள்'' என்றார் அவர்.

''கடன் கொடுக்கும் பொழுது ஒருவருடைய வருமானத்தை ஏ.ஜீ.ஏ. செயலகத்தில் அத்தாட்சிப்படுத்தி கடிதங்கள் கொண்டு வருகின்றார்கள். அவை பொய்யான மோசடிக்கடிதங்களாக இருக்காதா?'' என்று தனது சந்தேகத்தை வெளியிட்டேன். ''ஒரு வங்கியாளர் தனது வேலைகளில் கவனமாக நடந்தால் போதுமானது. மோசடிகளுக்கு பொலிஸ் இலாகாவே பொறுப்பு'' என்று விளக்கினார். ''முட்டையில் மயிர் பிடுங்கக்கூடாது தானே'' என்றேன் நான். கொல் என்று சிரித்தார் அவர். ''இன்று மாலை நாங்கள்

ஆலங்கேணிக்குப் போவோம் கிண்ணியா வைத்தியசாலையில் ஒரு யாழ்ப்பாணத்தவர் இருக்கின்றார். அவரும் வருவார்'' என்று அழைத்தார் முகாமையாளர்.

ஆலங்கேணியைச் சென்றடைந்தோம். அது ஒரு தமிழ்க் கிராமம். அங்கு ஒரு பிள்ளையார் கோவில் இருந்தது. பாடசாலை இருந்தது. நாங்கள் போன இடம் ஒரு பெரிய தோட்டமாக இருந்தது. எல்லா வகையான பயிர்களும் காணப்பட்டன. வாட்டசாட்டமான ஒருவர் இருந்தார். ''இவர் கப்டன் சரவணமுத்து'' என்று அவரை எனக்கு அறிமுகப் படுத்தினார்கள். பல பெரிய படங்கள் எல்லாம் விறாந்தையில் தொங்கின. ''யார் இவர்கள்'' என்று நான் கேட்டேன். ''கப்டன் சரவணமுத்து சேர் பொன் இராமநாதன் பரம்பரையைச் சேர்ந்தவர்'' என்றார் முகாமையாளர்.

''இன்று மாலை இங்கு சாப்பிடுங்கள்'' என்று விருந்தோம்பல் செய்தார் கப்டன். ''அப்ப நாங்கள் சேயமன் வீட்டிற்குப் போய்விட்டு வருகின்றோம்'' என்று கூறினார் முகாமையாளர். சேயமன் வீடு சிறிதாகத்தான் இருந்தது. அவர் ஒரு தமிழர். அவருக்குப் பிள்ளைகள் இல்லை. கிண்ணியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கிராமிய வங்கி

முகாமையாளராக வேலை செய்தார். சிறிது நேரம் உரையாடிவிட்டு கப்டன் சரவணமுத்து வீட்டிற்குச் சென்றோம். நீங்கள் உண்ணும் உணவில் உள்ள எல்லாப் பொருட்களும் எனது தோட்டத்திலேயே உற்பத்தி செய்யப்பட்டது'' என்றார் கப்டன். ''உப்புக்கூடவா'' என்று நான் கேட்டேன். ''ஓமோம்'' என்று அவர் பதிலளித்தார்.

இந்தத் தோட்டம் 100 ஏக்கர் விஸ்தீரமானது என்றார் கப்டன். ''நீங்கள் ஒரு சிறப்புப் பட்டதாரியாக இருப்பதனால் ஓய்வு பெறும் பொழுது உதவி பொது முகாமையாளர் பதவியில் இருப்பீர்கள்'' என்றேன் நான் முகாமையாளரைப் பார்த்து.

''இல்லை எனது சாதகப் பலனின்படி 39 வயது தான் எனது எல்லை'' என்றார் முகாமையாளர். என்ன இவர் இப்படிக் கூறுகின்றார் என்று நான் ஆச்சரியப்பட்டேன். பொழுது சாயும் நேரம் கிண்ணியா துறையடி பிள்ளையார் கோவில் பூசையில் கலந்து கொண்டோம். அடுத்தநாள் காலை நான் கந்தோருக்கு ஆயத்தமான பொழுது ஒரு பழைய சேமிப்புப் புத்தகத்தை காட்டி ''இது செல்லுமா'' என்று கேட்டார் முகம்மது.

''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள். அது உங்களுடைய பணம். எப்பொழுதும் எடுக்கலாம்.

என்றாலும் ஒரு சிறு தொகையை வைப்புச் செய்தால் நல்லது'' என்றேன் நான்.

''ஏன் பாஸ்புக் என்று சொல்கிறார்கள்'' என்று கேட்டார் முகம்மது. அடிக்கடி வாடிக்கையாளர்களுக்கும் வங்கிக்கும் இடையே பாஸ் பண்ணுவதால் தான் என்றேன் நான். எனது பேச்சை நம்பாமல் சிரித்தார் அவர். ''ஓமோம்'' அப்படித்தான் என்று கூறினேன்.

''சேர் உங்கடை மார்கழித் திருவெம்பாவை எல்லாம் இங்கே வைப்பார்கள். விடியேக்கை மணியடித்து தெருவெல்லாம் பாட்டுப் பாடிக்கொண்டு போவாங்கள்'' என்றார் முகம்பது.

பல தடவை மக்கள் வங்கி முகாமையாளரைச் சந்தித்தேன். பல விடயங்களைத் தெளிவுபடுத்தினார். வங்கி வாடிக்கையாளர் பலரது தகவல்களையும் தந்தார். அறுவடைக் காலம் கிட்டியது. வாடிக்கையாளரின் வீடுதேடி கண்டுபிடிப்பது அவரால் எளிமையானது. கணிசமான விவசாயிகள் தங்களது கடனைத் திருப்பி செலுத்தினார்கள். ஆனால் குறிஞ்சாக்கேணி கிளையை பாதுகாப்புக் காரணங்களுக்காக கிண்ணியா கிளையுடன் இணைத்து விட்டார்கள்.

நண்பர் சிவராமலிங்கம் மூதூர் கிளை முகாமையாளராக இருந்தார். நான் யாழ்ப்பாணம்

மாற்றமாகி வந்த சில நாட்களின் பின் காலை பத்திரிகை பார்த்தபோது எனது நெஞ்சை உறையவைக்கும் செய்தி யாழ்ப்பாணத்துப் பத்திரிகையில் இருந்தது. ஆம் அந்த மக்கள் வங்கி முகாமையாளரின் மரண அறிவித்தல் தான் அது. ஆனால் அவருடைய வயது அப்பொழுது 39 இல்லை. சாவீட்டிற்குச் சென்றபொழுது அங்கு பலர் இருந்தனர். ஒரு பழைய கொழும்புப் பத்திரிகை இருந்தது. ''தோழமை என்று ஒரு சொல்'' என்ற ஒரு கட்டுரையை மலையக தொழிற்சங்கவாதியும் இலக்கியவாதியுமான அந்தனி ஜீவா அதில் எழுதியிருந்தார்.



## பாருக்குள்ளே நல்ல நாடு

“அப்பாவைக் காணல்லே” என்றார் அந்த வாலிபர். பார்ப்பதற்குப் பல்கலைக்கழக மாணவர் போலிருந்தது. வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம். அப்பாவைக் காணவில்லையென்றால் பொலிஸில் முறைப்பாடு செய்யலாம். அல்லது சுண்டுக்குளி சோமசுந்தரம் அவென்னியூவில் உள்ள மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யலாம். இங்கு ஏன் வந்தார் என நினைத்தேன் நான். நான் எம்.ஜீ.ஆர் பாணியில் பதில் சொன்னேன். “தம்பி என்னை உங்கள் அப்பாவாக நினையுங்கள் என்ன பிரச்சினை” என்று கேட்டேன். “சேர் நான் ஒரு சேமிப்புக்கணக்கு திறக்க வேண்டும். நான் கல்வியியற் . கல்லூரியில் படிப்பதற்காக வந்திருக்கிறேன். படிப்பு முடித்து போகும் போது எனது கணக்கை மூட அனுமதிப்பீர்களா?” என்று கேட்டார் அந்த வாலிபர். “உங்கள் கணக்கை நீங்கள் மூடுவது உங்கள் உரிமை. சட்டப்படி யாரும் அதைத் தடுக்க முடியாது” என்றேன் நான்.

"எங்கள் அம்மா கான்சர் வந்து இறந்து போனா. இறக்கும் முன்பு ஒரு வங்கிக்கு அவவுடைய கணக்கை மூடச்சென்ற போது அதை மூடவேண்டாமென்று பல ஆலோசனைகள் சொன்னார்கள். கடைசியில் அம்மா இறந்த பின்பு அந்த காசை எடுக்க நாங்கள் மிகவும் கஷ்ரப்பட்டோம்" என்றார் அந்த வாலிபர். "உங்களுக்கு விரும்பிய நேரத்தில் கணக்கை மூடி தருவோம். நான் இடமாற்றத்தில் போய்விட்டால் என்னுடன் தொடர்பு கொள்ளுங்கள்" என்று எனது விலாசத்தை கூறினேன். அதற்குப் பிறகு பல தடவை வங்கியில் அந்த வாலிபர் காணப்பட்டார். பல மாதங்கள் கடந்து மீண்டும் ஒரு முறை என் முன்னால் வந்து அமர்ந்தார். சரிதான் இன்று யாரைக் காணவில்லையோ தெரியாது என்று நான் நினைத்தேன். "எங்கள் வீட்டிலே ஒரு குழப்பம் சேர்" என்றார் அந்த மன்னார் மாவட்ட மாணவர். கடவுளே என்ன குழப்பமோ என்று நான் நினைத்தேன். "ஏன் தம்பி என்ன பிரச்சினை" என்று கேட்டேன். எனக்கு ஒரு வெளிநாட்டு காசோலை வீட்டுக்கு வந்திருக்கு. அதை மாற்றி காசாக்க வேனும்" என்றார் அந்த கல்வியியற் கல்லூரி மாணவர். "உங்களுக்கு மன்னாரில கூட்டுச் சேமிப்புக் கணக்கு இருக்குதா" என்று கேட்டேன். "இல்லை சேர்" என்றார். ஒரு கூட்டுக் கணக்குப் படிவத்தில் அவருடைய பகுதியை

பூர்த்தி செய்து எங்களுடைய மன்னார் கிளைக்கு அனுப்பி வைத்தேன். அங்கு அவருடைய அப்பா போய் கணக்கைத் திறந்து காசோலை வைப்புச் செய்து பணத்தைப் பெற்றுக் கொண்டார்.

பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் கைலாசபதி கலையரங்கத்தில் நடந்த பல நிகழ்வுகளில் அவரைக் கண்டேன். நல்லை ஆதீனத்தில், துர்க்கா மணிமண்டபத்தில், நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடந்த நிகழ்வுகளில் எல்லாம் அவரைக் கண்டேன்.

பல மாதங்கள் சென்றன. மீண்டும் எனது மேசையடிக்கு வந்தார் அந்த வாலிபர். அன்று திங்கட்கிழமை சம்பள நாள். வங்கி சனக்கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. அன்று ஊழியர் பலர் லீவில். இன்று இவருக்கு என்ன பிரச்சினையோ என்று நான் நினைத்தேன்.

''சேர் எனது பயிற்சிக் காலம் முடிந்து விட்டது. உங்களுக்குச் சொல்லிவிட்டுப் போக வந்தேன்'' என்றார் அவர். எனக்கு திக்கென்றது. ஊழியர் பற்றாக்குறை மோசமாக இருந்தது. வங்கிக் கணக்கை விரும்பிய நேரத்தில் மூடிக்கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்தது ஞாபகம் வந்தது. அவராகவே விடயத்தைத் தொடங்கினார்.

''சேர் யாழ்ப்பாணம் கல்விக்கு மிகவும் சிறந்த இடம். நான் பீ.ஏ. இறுதி பரீட்சைக்கு தேவையான நோட்ஸ் எல்லாம் எடுத்து விட்டேன். இங்கு தொழில்நுட்பக் கல்லூரி, உயர்தொழில் நுட்பக் கல்லூரி, கல்வியியற் கல்லூரி, திறந்த பல்கலைக்கழகம், பல்கலைக்கழகம் எல்லாம் கிட்டக்கிட்டவே இருக்கின்றது. இங்கு எல்லா இடத்திற்கும் சைக்கிளில் போய் வரமுடிகிறது. பல மாவட்ட மாணவர்கள் பலரை சந்திக்க முடிகின்றது. எத்தனை நிகழ்வுகள் எத்தனை இடங்களில் நடக்கிறது. எதைப் பார்ப்பது எதை விடுவது என்பதே பெரிய பிரச்சினை என்றார் அந்த மாணவர்.

''நான் எனது கணக்கை மூடல்ல சேர். எப்படியும் யாழ்ப்பாணம் வரும்பொழுது இந்தக் கணக்குத் தேவைப்படும்'' என்று கூறினார்.

''நீங்கள் எம்.ஏ. படிக்க எப்படியும் யாழ்ப்பாணம் வரத்தானே வேண்டும்'' என்றேன். அவர் சிரித்துக் கொண்டே ஓம் என்றார்.



## பாற்கஞ்சி

''அம்மா பாற்கஞ்சி நாளைக்கு காலமை காச்சுவம். ஒரே பாணைத் திண்டு திண்டு வயிறெல்லாம் புகையுது. பாணுக்கு உப்புக் கூடப் போடுறாங்கள். இப்ப பாணுக்கு உள்ளீடுகள் விலையாக்கும்'' என்றாள் மகள்.

''தீட்டல் பச்சை கிலோ 150 ரூபா விக்குது. உந்த விலைக்கு வாங்கி கஞ்சி காச்ச வேணுமோ. 'பாற்கஞ்சி' என்று ஒரு பிரபல்யமான சிறுகதை எல்லே இருக்குது'' என்றேன் நான்.

''என்னப்பா ஒருக்கால் அந்தக் கதையைச் சொல்லுங்கோ'' என்றாள் மகள்.

''ஒரு ஏழை விவசாய குடும்பத்தில் சரியான வறுமை. ஒவ்வொரு நாளும் கூழ் தான் காச்சிறவை. அப்ப அவையின்ரை பிள்ளை பாற்கஞ்சி காச்சித் தரச்சொல்லி கேட்குது. வயல் விளைஞ்சு போச்சு. அறுவடை நாள் கிட்டுது. புது நெல்லு வெட்டி

பாற்கஞ்சி காச்சலாம் என்று தாய் குழந்தையை சமாதானப்படுத்துகிறா. அறுவடை நாள் கிட்ட கொட்டு மழை பெய்து விளைஞ்ச நெல் எல்லாம் வெள்ளத்தில் பாழாய்ப் போச்சு. இதுதான் கதை.'' ''யாரப்பா எழுதினது உந்தக் கதையை'' என்று கேட்டாள் மகள். ''சி. வைத்தியலிங்கம் என்று அவர் பெரிய அரசாங்க அதிகாரியாக இருந்தவர்.''

''நாங்கள் மணல்தறை லேன் திருநெல்வேலியில் சம்பந்தர் மாமா வீட்டில் வாடகைக்கேல்லே எல்லே இருந்தனாங்கள். அவரும் உப்பிடி ஒரு பிரபல்யமான ஒருவரெல்லே'' என்றாள் மகள்.

''ஓமோம். இன்னும் ஒருவர் இலங்கையர்கோன் இந்த மூவரையும் இலங்கைத் தமிழ் சிறுகதைகளின் மூவர்கள் என்று சொல்லுறவை'' என்று கூறிவிட்டு பையை எடுத்துக் கொண்டு பச்சை அரிசி வாங்குவதற்குக் கடைக்குச் சென்றேன்.

''ஏன் சில சங்கக் கடையிலை அரைவாசி பச்சை அரிசி எல்லே குடுக்கினம்'' என்றார் கடைக்காரர்.

''சம்பா திண்டு திண்டு அலுத்துப்போச்சு. முந்தி பணக்காரர்கள் தான் சம்பா சாப்பிடுறது. இப்ப எல்லாரும் சம்பாதான்'' என்றார் ஒரு முதியவர்.

"நான் நாலு சுண்டு இரவலாகத் தாறன் உங்களுக்குத் தரேக்கை தாருங்கோ" என்றார் கடையடியில் நின்ற அயல்வீட்டுக்காரர்.

"ஏன் அப்பா முத்தத்திலை வைச்சு கஞ்சி காச்சிறியள். ஏன் குசினி ஒழுக்கே" என்று நான் கேட்டேன்.

"இல்லை. மழை பெய்ய கறுப்பு கறையெல்லாம் ஒழுகி வருகுது. தடி எடுத்து கறை தட்டினனான் அதுதான்" என்றார் மனைவி. "மத்தியானம் உள்ளுக்கு வைத்துச் சமைக்கலாம்" என்று மீண்டும் தொடர்ந்தார்.

"இண்டைக்கு 'உ' காட் காரருக்குக் குடுக்கிறதாம். கஞ்சியை இறக்கி ஆறவையும்" என்றேன் நான்.

முன்னுக்கு இருந்து யாழ் பத்திரிகைகளில் மரண அறிவித்தல்களை பார்த்துக் கொண்டிருந்தேன். "அடி அடி கோதாரி விழுந்த கள்ள நாய்" என்று மனைவி பெரிதாகச் சத்தம் போட்டார்.

பின்னுக்குப் போய்ப் பார்த்தேன். தெரு நாய் ஒன்று கஞ்சி சட்டியை தட்டிவிட்டு ஓடுவது தெரிந்தது.

“இனி பாணும் வாங்க் ஏலாது” என்று சொல்லிவிட்டு சங்கக்கடைக் கியூவிற்குப் புறப்பட்டேன்.

“கடையளிலை பிஸ்கெட்டும் இல்லை. முந்தியெண்டால் டக்கெண்டு நூடில்ஸ் போடலாம். அதுவும் இல்லைக் கடையலிலை” என்றார் மனைவி.

தட்டுப்பாடு
முட்டுப்பாடு
கட்டுப்பாடு
சொட்டு கிடைக்குமா...?



## புகழ்

"ஐயா... ஐயா" என்று தேங்காய் பிடுங்குபவர் முற்றத்தில் நின்று கூப்பிட்டார்.

"அந்தத் தேங்காய் பிடுங்கிற மனிசன் போல கிடக்கு. போய் அம்மா இல்லை எண்டு சொல்லு". என்று மகனை விரட்டினாள் சுகந்தி.

"அம்மா இல்லை கடைக்குப் போட்டா" என்றான் சின்னப் பையன்.

"உம்மோடை கதைச்சது கேட்டது. நான் கொஞ்ச நேரம் இருக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டு முற்றத்தில் குந்தினார் பொன்னையா.

"அம்மா நாங்கள் கதைச்சது கேட்டிட்டுது. மனிசன் முற்றத்திலை இருக்குது" என்று கூறினான் மகன். தொடர்ந்து ரெலிபோனை டயல் செய்து பார்த்தாள் சுகந்தி. ஒருவாறு தொடர்பு கிடைத்தது. "போட்டிக்கு ரெடியா" என்று கேட்டார் அறிவிப்பாளர். "ஓம்" என்றாள் சுகந்தி. "பாட்டுப் போகிறது.

அப்படியே லயினில் இருங்கோ'' என்று கூறினார் அறிவிப்பாளர். திடீரென்று போன் தொடர்பு துண்டிக்கப்பட்டது. "Hello... Hello..." என்று கத்தினாள் சுகந்தி. கோபத்துடன் றிசீவறை வைத்துவிட்டு வெளியில் வந்தாள் சுகந்தி. ''என்னம்மா லயின் கட்டாப் போச்சே'' என்று கேட்டார் பொன்னையா. ''ஓமோம். கனநாள் உப்படி நடந்திட்டுது. என்ன வேணும்?'' என்று வெறுப்பாகக் கேட்டாள் சுகந்தி.

''அந்த உயர மரத்திலை தேங்காய் முத்தியிருக்கும்'' என்றார் பொன்னையா. அவருக்கு நகரத்தில் உள்ள வீடுகளில் உள்ள மரங்கள் எல்லாம் மனப்பாடம். ''நாங்கள் வேறை ஆளைக்கொண்டு பிடுங்கீச்சுப் போட்டம்'' என்றாள் சுகந்தி.

''ஒரு பத்து ரூபய் தாருங்கோ பிறகு கழிக்கலாம்'' என்றார் பொன்னையா. வேண்டா வெறுப்பாகப் பத்து ரூபாவைக் கொடுத்தாள் சுகந்தி. ''அண்டைக்கு றேடியோவில் நீங்கள் கதைத்ததைக் கேட்டனான்'' என்றார் பொன்னையா.

''ஒரு நாள் ஒரு நேயர் தனது ஊரின் பெயர் எட்டியாந்தோட்டை என்று கூறினார். உடனே அறிவிப்பாளர் அது எங்கே இருக்கிறது...'' என்று கேட்டார் என்று கூறிவிட்டுச் சிரித்தார்.

‘‘அதில் என்ன சிரிப்பு. எத்தனை ஊர் இருக்கும். எல்லா ஊர்ப் பெயரும் எல்லாருக்கும் தெரியுமே’’ என்றாள் சுகந்தி.

‘‘அம்மா அது பெரிய இடதுசாரித் தலைவர் என்.எம். பெரேராவின் தேர்தல் தொகுதி. ‘‘அதென்ன இடதுசாரி’’ என்று கேட்டாள் சுகந்தி. சுகந்தி ஒரு அரசியல் சிறப்புப் பட்டதாரி.

‘‘தொழிலாளர் விவசாயிகள் கட்சிக்காரர் எல்லாம் துவக்கத்திலை குறைந்த எண்ணிக்கையிலை தான் அதுவும் எதிர்க்கட்சியில் தான் எல்லா நாடுகளிலும் இருந்தவை. எதிர்க்கட்சிக்காரர் எப்பவும் இடது பக்கத்தில் தான் இருக்கிறவை. அதுதான் இடதுசாரி என்று பெயர் வந்தது’’ என்றார் பொன்னையா.

‘‘அப்படியோ’’ என்று கேட்டாள் சுகந்தி. ‘‘ஏன் தான் இந்தத் தொலைபேசி உரையாடல் நிகழ்ச்சி றேடியோவிலை வந்ததோ தெரியாது. பழைய பாட்டுக்கள் கேட்கேலாமல் இருக்கு’’ என்றார் பொன்னையா. ‘‘ஏன் கலியாண வீடுகள், சாமத்திய வீடுகளிலை லவுட் ஸ்பீகரிலை நெடுகப் பழைய பாட்டுக்கள் போடுகினம் தானே’’ என்றாள் சுகந்தி.

‘‘அம்மா இப்ப றேடியோவை நெடுக கேக்க வேண்டியிருக்கு. எங்கை குண்டு வெடிக்குதோ,

யாரைச் சுடுறாங்களோ தெரியாது'' என்றார் பொன்னையா.

''எல்லாரும் றேடியோவிலை கதைக்கேக்கை எவ்வளவு காசு வீணாகப் போகுது. எத்தனை பிள்ளைகளுக்கு கொப்பி, பென்சில் வாங்கக் காசில்லை'' என்றார் பொன்னையா.

''நீர்தானே சொல்லுறனீர் எங்கடை அப்பா உமக்கு பாரதியார் பாடல், தேவாரப் புத்தகங்கள் எல்லாம் வாங்கித் தாரவர்ரெண்டு'' என்றாள் சுகந்தி.

''அது தான் அம்மா உண்மையான புகழ். றேடியோவிலை கதைத்தால் அந்த நிமிடத்தோடை சரி. உங்கடை அப்பா தந்த புத்தகங்கள் என்ரை பேரப்பொடியன் வைச்சுப் படிக்கிறான்'' என்று கூறிய பொன்னையா மீண்டும் தொடர்ந்தார். ''அறிவிப்பாளர் 'க' வரியிலை தொடங்கிற படப்பட்டியல் கேட்டார். நேயர் ''கலைக்கோவில்'' என்று கூற இல்லை இல்லை... இல்லை... என்று பாட்டுப்பாடுறது மாதிரிக் கூறி மறுத்தார்'' என்று கூறிவிட்டு மீண்டும் சிரித்தார் பொன்னையா.

## நாயும் மனிதனும்

"என்ன ஐஸ்கிறீம் கோன் பிஸ்கட்டைப் பிய்த்து நாய்க்குப் போடுறியள்" என்று கேட்டார் முனிசிப்பல் லேபரர். "ஏன் நானும் தான் சாப்பிடுறனே. ஆகஸ்ட் 11ஆம் திகதிக்கு முதல் காலமை ஒரு பணிசை பிய்த்து நாய்க்குப் போட்டு நானும் சாப்பிடுறனான். இப்ப பாணுக்கே தட்டுப்பாடு. காலமை ஆனந்தியின்ரை கடைக்கு வந்தன், பாண் முடிஞ்சுது. இனி ஒன்பது மணிக்குத் தான் வருமாம். இந்த நாய் என்ரை காலைக் காலைச் சுற்றி வருகுது. பசிக்குதாக்கும். அண்டைக்கு நடுச்சாமம் சரியாய் குலைச்சுது. பின் கதவைத் திறந்து பாத்தன். வாசலிலை இந்த வீடு கட்டின மனிசன் அம்மி வைப்பதற்கு உயரமாய் ஒரு சின்ன மேடை கட்டியிருக்கெல்லே அதில் ஒரு சின்னச் சாந்தோப்பை கிடந்தது. ஆரோ மேசன்வேலை செய்யிறவை களவெடுக்க வந்திருக்கினம். நாய் குலைச்ச குலைச்சலிலை அந்த மேடையில் வைச்சிட்டு ஓடியிட்டினம்" என்றேன் நான்.

"எத்தினை தேத்தண்ணிக் கடையள் பூட்டிபோட்டாங்கள். தேத்தண்ணி கடையிலை மரவள்ளிக் கிழங்கு ரொட்டி தான் கிடக்குது. வடையெல்லாம் வடகம் சைசிலை விக்கினம். சங்கக் கடையிலை தேங்காயெண்ணெய் எனக்கு ஒருக்காலும் தரேல்லை. திருநெல்வேலி சந்தையிலை போத்தல் 800 ரூபாய் விக்கிறாங்கள். மோதகவள்ளி 200 ரூபா, கறனை 120, கத்தரிக்காய் 200 ரூபாய், மரவள்ளி ஒன்றுதான் கிலோ 40 விக்குது" என்றார் முனிசிப்பல் லேபரர். "நான் குப்பை எல்லாம் வெட்டித் தென்னைக்குத் தாட்டுப்போட்டன். தேங்காய் 100 ரூபா விக்குது" என்றேன் நான்.

"முந்தியெண்டால் தேத்தண்ணி கடையிலை தேத்தண்ணி தருவினம் குப்பை அள்ளேக்கை" என்று சொல்லிவிட்டு ஓடிப்போய் முற்றத்தில் பைப்பில் தண்ணீர் குடித்தார் அவர்.

"தண்ணித் தொட்டி கழுவிக் கனகாலம். உதிலை குடியாதேயும். இந்தாரும் இது கிணற்றிலை அள்ளின தண்ணீ" என்று எனது தண்ணீர்ப் போத்தலைத் தூக்கிக் கொடுத்தேன்.

"வேண்டாம் ஐயா. நான் கோயில் பைப்பிலை குடிக்கிறன்" என்று கூறினார் முனிசிப்பல் லேபரர்.

நான் திருந்தி விட்டேன். அவர் விசுவாசத்தைக் காண்பித்தார்.

''யாழ் எம்.சி.சி.எஸ் சிறாம்பியடி தேத்தண்ணிக் கடையிலும் யாழ்ப்பாணம் பெரிய கந்தோருக்கு முன்னாலை இருக்கிற தேத்தண்ணிக் கடையிலும் ஒரே சனம். முந்தி உந்தக் கடைக்கு ஒருதரும் போறேல்லை'' என்றேன் நான்.

''ஓம் நானும் கண்டனான். எங்கடை சங்கக்கடை மனேச்சர் அங்கை மேசை துடைக்கிறார்'' என்றார் முனிசிப்பல் லேபரர். ''எங்கடை கடையிலும் கொஞ்ச நாள் இருந்தவர். அதுதான் இருக்கும் இடத்திலெல்லாம் எல்லாம் இருந்தால் சௌக்கியமே என்று கண்ணதாசன் பாடினார்'' என்றேன் நான்.

''ஒரு பழைய ரீசேட் தாங்கோவன்'' என்று கேட்டார் முனிசிப்பல் லேபரர். தனது பழைய ரீசேட் ஒன்றைக் கொடுத்தான் எனது மகன்.



## சின்னஞ்சிறு கிளியே

"அம்மா"

"அம்மம்மா"

"அப்பா"

"அப்பப்பா"

"கமலா"

"கம்மலா"

"கம்மலா இல்லை மகள் "கமலா" என்று திருத்தினார் அந்தத் தாய். பிள்ளை திரும்பியும் "கம்ம்மலா" என்று கூறியது பிள்ளை.

"போங்கோ நான் சொல்ல மாட்டன்" என்று கூறியது பிள்ளை. "அச்சாப் பிள்ளையெல்லே" என்று கெஞ்சினாள் தாய். "நீங்கள் அந்த பாட்டு" என்றது குழந்தை.

சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே!
என்னை கலிதீர்த்தே – உலகில்
ஏற்றம் புரிய வந்தாய்!

குரலில் சோகம் தெரிந்தது. வாசற்படியில் கதிரையில் இருந்த நான் றேடியோவை நிற்பாட்டினேன். என்ன மிஸ்டர் ராம். என்ன யோசிக்கிறீர்கள் என்று கேட்டுக்கொண்டே உள்ளே வந்தார் முதியவர்.

''பேசாமல் இருக்கும்படி சைகை காட்டினேன். குந்தில் உட்கார்ந்த அவரும் பாட்டை ரசித்தார். ''யார் பக்கத்து வீட்டில் பாடுற உந்தப் பிள்ளை'' என்று கேட்டார் முதியவர்.

''தெல்லிப்பளையில் இருந்து இடம்பெயர்ந்தவை. புருஷன் 95 இடப்பெயர்விலை காணாமல் போய்விட்டான்'' என்றேன் நான். ''உப்பிடி எத்தனை விதத்திலை இளம் விதவையள் எல்லாம் இருக்கினம்'' என்றார் அந்த முதியவர். மழை தூறத் தொடங்க துவாயைத் தலையில் போட்டுக்கொண்டு போனார்.

அடுத்தநாள் காலையில் கந்தோருக்கு வெளிக்கிடும்பொழுது மகள் கூறினாள் ''அப்பா அந்தப் பக்கத்து வீட்டுச் சின்னப் பிள்ளை தனது பெயரை கம்ம்மலா'' என்று சொல்லுகுது'' என்று சிரித்தாள்.

"ஏன் நீ மட்டும் என்னவாம். உன்ரை பெயரை "காஞ்ஞ்சன்னா" என்று சின்னப் பிள்ளையிலை கூறினனி" என்று நான் கூறினேன். சில நாட்களில் நாங்கள் நகரத்திற்கு இடம்பெயர்ந்து போய்விட்டோம்.

பல மாதங்களுக்குப் பிறகு "அப்பா நான் எங்கடை வீடு பார்க்கப் போனனான். அந்தச் சின்னப்பிள்ளை நல்லாக் கதைக்குது. தாய் அதீன்ரை அண்ணாவிற்கு பாடம் சொல்லிக் கொடுக்கேக்கை கேள்வி கேட்டாள். கமலா டக்கெண்டு மறுமொழி சொல்லுகுது. நான் கண்ணாலை கண்டனான்" என்றாள் மகள்.

"பாத்தியா அப்பவே நான் சொன்னனான்" என்றேன். பின்பு ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் மாவட்டத்தில் அதிக புள்ளிகளை பெற்றாள் கமலா.

"சின்னஞ்சிறு கிளியே என்று அவள் தாய் பாரதியாரின் பாடலைப் பாடுவது எனது காதில் என்றும் ஒலித்தபடி.

"யாவும் கற்பனை"

## கண்ணம்மா – என் குழந்தை

(பராசக்தியைக் குழந்தையாகக் கண்டு சொல்லிய பாட்டு)

ராகம் – பைரவி தாளம் – ரூபகம்

சின்னஞ் சிறு கிளியே – கண்ணம்மா!
செல்வக் களஞ்சியமே!
என்னைக் கலி தீர்த்தே – உலகில்
ஏற்றம் புரிய வந்தாய்!

பிள்ளைக் கனியமுதே – கண்ணம்மா
பேசும்பொற் சித்திரமே!
அள்ளியணைத்திடவே – என்முன்னே
ஆடி வருந்தேனே!



## பெற்ற தாயும்...

மேல்மாடியில் இருந்து அரசாங்க அதிபர் மனோம்மேரி கீழே இறங்கி எங்களது கந்தோருக்கு வந்தார். "காலையில் 200 பேர் பென்சன்காரரைக் கண்டேன். எங்கே அவ்வளவு பேரும்" என்று கேட்டார். "எல்லோருக்கும் காசு கொடுத்து அனுப்பி விட்டோம்" என்று கூறினோம். "வெரிகுட்" என்று பாராட்டினார். உங்கள் எல்லாரையும் பாராட்டி பொதுமுகாமையாளருக்கு எழுதப்போகிறேன்" என்று கூறினார். எல்லோருடைய பெயரையும் கேட்டு எழுதிக்கொண்டு போனார்.

"கொஞ்ச நேரத்தில் மனேச்சர் லட்சுமணன் வந்தார். அவரிடம் நடந்ததைக் கூறினோம். அவரும் தானும் அதைத்தான் கூறுவதாக வெகுவாகப் பாராட்டினார். அல்பிறட்டுக்குப் பெரிய சந்தோசம். பண்டாராவுக்கும் தென்னக்கோனுக்கும் மகிழ்ச்சி. அவர்கள் இருவரும் உள்ளூர்காரர்கள். நான் இதை ரசிக்கும் நிலையிலில்லை. காலியில் இருந்து இடமாற்றங் கேட்க அனுராதபுரத்தில் கொண்டு வந்து

விட்டிருக்கிறார்கள். பொரிந்து தள்ளினேன். ''கவலைப்படாதே. அடுத்த இடமாற்றம் யாழ்ப்பாணத்திற்குத் தானே'' என்று கூறினான். இன்னும் இரண்டு வருடம் கழிந்தால் தான் யாழ்ப்பாணம் இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

வெள்ளிக்கிழமை வந்தது. கச்சேரியில் நிறையப் பேர் யாழ்ப்பாணத்தார் வேலை செய்தார்கள். கோச்சி ஒரு மணித்தியாலம் லேட் என்று வந்து சொல்லிவிட்டுப் போனார்கள். அனுராதபுரம் கச்சேரிக் கட்டடம் சரியாக யாழ்ப்பாணக் கச்சேரியைப் போன்ற கட்டட அமைப்புக் கொண்டது. எங்கள் கந்தோரில் இருந்து பார்த்தால் பொலிஸ்ரேசன் தெரியும். கச்சேரி மதிலும் உடைக்கப்பட்டிருந்தது. 1971 புரட்சியின் போது J.V.P.யினர் தாக்கலாம் என்று மதிலை உடைத்ததாகக் கூறினார்கள்.

ரயில்வே ஸ்ரேசனில் எல்லோரும் கூடி நின்றோம். ராசேந்திரா எனக்குக் கூறினார். ''முருகதாஸ் ரெயிலில் ஏறி டக்கென்று இருக்கப்பார். கன சிங்கள சனம் இதில் இறங்கும். அப்படி இடம் கிடைக்காட்டில் சிங்களச் சனம் இருக்கிற இடம் பார்த்து அருகில் நின்று கொள். மதவாச்சி இல்லாட்டி வவுனியாவிலை இறங்குவினம். அவையின்ரை இடத்திலை இருக்கலாம்'' என்று கூறினார். நான்

ஒரு சிங்கள யுவதி இருந்த இடத்தின் அருகில் நின்று கொண்டிருந்தேன். அவள் மதவாச்சியிலும், வவுனியாவிலும் இறங்கவில்லை. அவளுக்கு முன்னால் இருந்தவர்கள் இறங்கினார்கள். நான் போய் அதில் இருந்தேன். இன்னுமொருவர் அவளை ஆங்கிலத்தில் கேட்டார் "ஏன் இறங்கவில்லை" அவள் சிரித்துக்கொண்டு பதில் கூறினாள். "நான் Perdenita Universityயில் படிக்கிறேன். மற்றவரை வியப்பில் ஆழ்த்தத்தான் அப்படிச் சாறி கட்டியதாகக் கூறினாள்.

கொடிகாமம் ஸ்ரேசனில் இறங்கினேன். தில்லைநாதன் A40 காருடன் நின்றார். வேறு கார்களும் காணப்பட்டது. இராமர் கோயிலில் தோட்டம் செய்யும் இளைஞர்கள் பலர் அவ்விடத்தில் காணப்பட்டனர். நான் எனது பாடசாலைத் தோழன் தம்பையாவின்ரை சைக்கிளில் ஏறி வீடு போய்ச் சேர்ந்தேன். சனிக்கிழமை வீரசிங்கம் வித்தியாசாலை விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. ஞாயிறு மாலை சாப்பிட்டுவிட்டு மீசாலை ஸ்ரேசனில் இரவு மெயில் ரெயின் ஏறி நடுச்சாமம் அனுராதபுரம் போய்ச் சேர்ந்தேன்.

தங்கும் விடுதி, தபால் கந்தோர், சாப்பாட்டுக்கடைகள், கச்சேரி ரெயில்வே ஸ்ரேசன் எல்லாம் கிட்டக்கிட்டவே அமைந்திருந்தது.

வேலை முடித்து இரவு சாப்பிட்டு விட்டு ஆறுதலாக கடிதம் எழுதி இரவு 10 மணிக்கு தபாலில் போடலாம். அதிகாலை கடிதங்கள் கையில் கிடைக்கும். கொழும்பு மெயிலும், யாழ் மெயிலும் அங்கு தான் ஒன்றை ஒன்று சந்திக்கும்.

கதிரேசன் கோயில் திருவிழா நடந்தது. முல்லைச் சகோதரிகளின் இன்னிசைக் கச்சேரியும் விவேகானந்தா வித்தியாலயத்தில் தமிழ் விழாவும் நடந்தது. ''தேன்துளி இலக்கிய வட்டம்'' என்று ஒரு இலக்கிய வட்டம் இருந்தது. முஸ்லீம் இளைஞர்கள், தமிழ் இளைஞர்கள் அங்கம் வகித்தனர். செங்கையாழியனின் ''வாடைக்காற்று'' விமர்சன அரங்கு நடைபெற்றது. நானும் பேசினேன். ஆலை இல்லா ஊருக்கு இலுப்பைப்பூ சக்கரை என்று பகிடி விட்டனர்.

நுவரவாவித் தொங்கலில் ஒரு பிள்ளையார் கோயில் இருந்தது. அங்கு போவோம். அரச மரம் உள்ள இடத்தை பழைய நகரம் என்று சொல்வார்கள். நகரின் பரிபாலனம் நகரசபையோ அல்லது மாநகரசபையோ நடத்தவில்லை. நகருக்கு என்று ஒரு அதிகாரசபை இருந்தது. நகரசபையின் உபதலைவராக சட்டத்தரணி நடராசா இருந்ததைப் பொறுக்கமுடியாமல் நகரசபையைக் கலைத்து அதிகாரசபையை உருவாக்கியதாகக் கூறினார்கள்.

5000 தமிழ் வாக்குகள் நகரத்தில் இருப்பதாகக் கூறுவார்கள். டிசெம்பர் மாதம் வந்தது. கச்சேரியில் வருட முடிவில் கொடுப்பனவுகள் மிகுதியாக இருக்கும் என்று பயமுறுத்தினார்கள். கடைசி நாள் வேலை செய்வது மிகவும் கஷ்டம் என்று கூறினார்கள். ''முருகதாஸ் ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம்'' என்று அல்பிரட் கூறுவார். எல்லோரும் மெச்சும்படி வேகமாக வேலை செய்தோம். மீண்டும் ஒரு தடவை அரச அதிபர் நேரில் வந்து பாராட்டினார். பொதுமுகாமையாளருக்கும் எழுதினார்.

1975இல் நான், இராசேந்திரா, அல்பிரட், மிஸ். செல்லத்துரை, மிஸ். ஜெயந்தி குமரேசன் எல்லோரும் வெவ்வேறு மாதங்களில் யாழ்ப்பாணக் கிளைக்கு வந்து சேர்ந்தோம். 1995 இடப்பெயர்வின் போது நண்பர் அல்பிரட் காச்சலால் பீடிக்கப்பட்டு மிருசுவிலில் மரணமானார். மிருசுவிலில் தான் அப்பொழுது அவர்கள் இருந்தார்கள். நான் ஓடிச் சென்றேன். ஒரு சிறு குடிசையில் அவரது உடல் அழகிய பேழையில் வைக்கப்பட்டிருந்தது.

என்னைக் கண்டதும் அழுதார்கள். கிறிஸ்தவ கீதங்களை அவர்கள் பாடினார்கள். மனது கனத்தது. அமைதி வந்தது.

அனுராதபுர நினைவுகள் மனதில் மீண்டும் வந்தன. அழகான ஜெயந்தி, அமைதியான குறு விழிகளுடன் பிரேமா. படபடவென சிரிக்கும் சந்திரா பெண் விவசாயப் பட்டதாரி. தோழமையுள்ள அமரசிங்க மூன்றாவது இடத்திற்கு உயர்ந்த மிஸ்ரர் தென்னக்கோன் அவரின் மனிதநேயம், நெல்வயல்கள்...



## பெய்யெனப் பெய்யும் மழை

மகிழ்ச்சி பொங்க அந்தச் சிறுவன் கிணற்றில் இருந்து தண்ணீரை அள்ளி வாளிகளை நிரப்பிக் கொண்டிருந்தான். நான் கிட்டப்போய் பேச்சுக் கொடுத்தேன். ''என்ன சனி ஞாயிறு உனக்கு வேட்டை தான். எல்லோரும் நின்றால் பேசுவார்கள். இப்ப நாங்கள் மூன்று பேர் தானே'' என்றேன். ''ஏன் இல்லாட்டி, நீங்கள் எல்லாம் வேலைக்குப் போக பின்னேரத்தில் பள்ளிக்கூடம் முடியவந்து அள்ளுறனான் தானே'' என்று தனது சூழ்நிலைக்குத் தக்கவாறு மாறும் இயல்பினைக் கூறினான். ''ஏன் உங்கடை வீட்டுக்கு முன்னாலே அரசாங்கம் கட்டின குழாய் கிணறு இருக்குத்தானே'' என்றேன். ''ஓம் சேர். ஆனால் அந்தத் தண்ணியில் மண் மணக்கும்'' என்றான். சேர் எங்களுக்குப் பாவற்குளத்தில் வயல், வீடு எல்லாம் இருக்கு சேர். வேளாண்மை செய்ய அப்பாட்டைக் காசு இல்லை என்றான். ''ஏன் விவசாயக் கடன் எடுக்கலாம் தானே'' என்று நான்

கேட்டேன். ''முந்தி எடுத்த கடன் கட்டேலை. வயல் சிங்களவர் விலைக்குக் கேட்கிறாங்கள். ஐயாவிற்கு விற்க விருப்பமில்லை'' என்றான். மெதுவாகக் கறுக்கத் தொடங்கியது வானம். போகப் போக இருண்டு கொண்டு போனது. ''என்ன மழை பெய்யப் போகுது போல'' என்று கேட்டேன். ''ஓம் சேர் இன்னும் ஒரு மணித்தியாலத்திலை மழை பெய்யும்'' என்று அந்தப் பையன் கூறினான். ''அவ்வளவு நேரம் செல்லுமா?'' என்று கேட்டேன். ''ஓம் வவுனியாவிலை அப்படித்தான்'' என்றேன். ''சேர் நீங்கள் ஹட்டனில் இருந்து கிட்டடியில் தானே மாற்றத்தில் வந்தனீங்கள். அங்க எப்படி நெடுக மழை பெய்யுமாமே'' என்று கேட்டான். ''வருடத்தில் ஒன்பது மாதங்களும் நன்றாக மழை பெய்யும். வருடத்தில் மூன்று மாதமும் அவ்வளவு மழை பெய்யாது. மழை நன்றாகப் பெய்யும் மாதங்களில் காலையில் வெயில் எறிக்கும். மத்தியானம் மழை பெய்யத் தொடங்கினால் விடியும் மட்டும் மழை கொட்டிக் கொண்டே இருக்கும். உண்மையில் மலை நாடுதான் கஸ்டப் பிரதேசம்'' என்றேன். அப்ப ''நுவரேலியா இன்னும் கூட மழை பெய்யுமோ?'' என்று கேட்டான். ''இல்லை. நுவரெலியா இலங்கையிலே உயரமான இடம். முகில் கூட்டங்கள் கிட்ட வரும். ஆனால் இலங்கையிலே அதிகம் மழை கூடிய இடங்கள் வட்டவளை, லக்சபானா, மஸ்கெலியா,

நோர்வூட், நோட்டன், பிறிச், பொகவத்தலாவ இவையெல்லாம் ஹட்டனைச் சுற்றித் தான் இருக்கின்றன. இவையெல்லாம் வெள்ளைக்காரன் தோட்டங்களுக்கு வைச்ச பேர்'' என்று கூறிக்கொண்டிருக்க மழை தூறத் தொடங்கியது. நான் குவாட்டஸ்க்கு ஓடிப்போனேன். அவன் வாளிகளைத் தூக்கிக் கொண்டு போனான். வீட்டு முற்றத்திலே நின்று இரண்டு கைகளையும் பக்கவாட்டில் நன்றாக நீட்டியபடி நனைந்து கொண்டிருந்தான். தண்ணீருக்குக் கஷ்ரப்படும் அந்த ஏழை வீட்டுக்கு இன்று வருண பகவான் கருணை பொழிகின்றது.

அடுத்தநாள் நகரத்தில் அவனது தகப்பனைக் கண்டேன். என்னைக் கண்டபோது ''சேர் கலவர அழிவுக்கு பொலிசிலை அழிவு விபரம் மூன்று கொப்பி ரைப் அடித்துக் கொண்டு போகவேணும். இவன் பொட்டிசம் அடிக்கிறவன் ஆடு, மாடு எல்லாம் காணாமல் போனது, அதைச் சேர்த்து ரைப்படி என்றால் மாட்டேன் என்று சொல்கிறான்'' என்று கூறினார். எங்கே என்று காட்டு என்று அவனையும் கூட்டிக்கொண்டு போனேன். அவனுக்கு நல்ல பேச்சுக் கொடுத்து அவர் சொல்வதையும் சேர்த்து அடிக்கும்படி கூறினேன். சேர் இதைப் பொலிசிலை பதிந்து ஜி.எஸ். இடம் கொடுத்தால் பிறகு அழிவு காசு தருவாங்கள்.

கெதியாய் தந்தாங்கள் என்றால் நாங்கள் பாவற்குளத்திற்கு எங்கடை வயல் செய்யப் போயிடுவோம்'' என்றார். இவையெல்லாம் சரியாய் நடக்குமா...? கிளாலியால் யாழ்ப்பாணத்திலிருந்து வருபவர்களால் வவுனியா நகரம் களை கட்டியிருந்தது.

அகதி வாழ்க்கை
மிகுதி துன்பம்
கனதி அனுபவம்
மனதில் குறையும்.

என்ன செய்யலாம்
பின்ன பழகலாம்
சொன்ன வாய்பொய்தான்
கன்னைக்கு லாபமே.



# சிறுபிள்ளை வேளாண்மை

கவுண்டரில் இருந்த குமாருவுக்கு பியோன் பியதிலக ஒரு கடிதம் கொடுத்தான். வீட்டில் இருந்து வந்திருந்தது. அக்காவின் கையெழுத்து. கடிதத்தை உடைத்துப் படித்தான். ''ஏன் தைப்பொங்கலுக்கு வரவில்லை. சித்திரை வருடப்பிறப்பிற்கு கட்டாயம் வரவும். லீவுக்கு இப்பவே சொல்லி வைக்கவும். சிங்கள சோதனை கவனமாகப் படித்து பாஸ் பண்ண முயற்சிக்கவும்.'' இது தான் சாராம்சம்.

''என்ன குமார் வீட்டில் இருந்து கடிதம்'' ஆங்கிலத்தில் கேட்டார் அடுத்த கவுண்டரில் இருந்த கமகே.

இருவரும் ஒரு நாளில் தான் வேலையில் சேர்ந்தோம். ''ஓவ்'' என்று சிங்களத்தில் மறுமொழி. எனக்கு ஒரு சிறு மகிழ்ச்சி. கமகே நல்ல சிகப்பு. அழகானவர். சுருள் தலைமயிர். என்ன விடயம் என்று ஆங்கிலத்தில் கேட்டார். நான் தட்டுத் தடுமாறி சிங்களத்தில் மறுமொழி கூறினேன். ''குமார் கொந்தட்ட சிங்கள் கத்ததா கறனவா'' என்று கமகே அடுத்த கவுண்டரில் இருந்த லக்சுமனிடம் கூறினார்.

"கவலைப்பட வேண்டாம். பின்னேரம் காசு பலன்ஸ் பண்ணும் பொழுது கருணசேனாவிடம் இப்பவே கூறி வைப்போம்" என்றார்கள். கருணசேன மேலதிகாரி. பூசா குதிரைப்பந்தயத் திடலுக்கு அருகாமையில் அவரது வீடு.

பின்னேரம் இருவரும் மேலதிகாரியிடம் கூற "ஓம்" என்று எல்லோரும் ஆதரித்தார்கள். வேலையிற் சேர்ந்து 1½ வருடம் தான் ஆகியிருந்தது. சென்ற ஆவணியில் அம்மாவின் திவசத்திற்கு மீசாலைக்குப் போன பின்பு யாழ்ப்பாணம் போகவேயில்லை. பைப் தண்ணி சம்மறிச் சாப்பாடு எல்லாம் எனக்கே வெறுத்துப் போயிருந்தது. வீட்டுக்குப் போனால் யாழ்ப்பாணம் போய் றீகல் தியேட்டரில் ஆங்கிலப்படம் பார்க்கலாம். நண்பர்களுடன் சேர்ந்து சந்திகளிலிருந்து அரட்டை அடிக்கலாம். யாழ்ப்பாணம் சென்றால் பொது நூலகத்தில் பலரைச் சந்திக்கலாம். வீரசிங்கம் மண்டபத்தின் முன் சிறிய மண்டபத்தில் இலக்கியக் கூட்டங்கள், புத்த வெளியீடுகள் பார்க்கலாம். வேம்படி றிம்பர் கோலிலிலும் இப்படியான கூட்டங்கள் பார்க்கலாம்.

கோட்டை நுழைவாயிலில் இருந்து 200 யார் தூரத்தில் எங்கள் கந்தோர். எங்கள் கந்தோர் தான் 1ஆவது கட்டடம். இருபக்கமும் டெனிஸ் விளையாட்டு

மைதானம். கிளப்புகளும் இருந்தன. கந்தோரில் இருந்து பார்க்கக் கோட்டை வாயில் தெரியும்.

கோட்டை ஒரு மாநகரசபை வட்டாரம். நூற்றுக் கணக்கில் வீடுகள் இருந்தன. தியேட்டர்கள், சந்தை, பெரிய கடைகள் எல்லாம் வெளியே ஒரு மைல் தூரத்தில் இருந்தது. முஸ்லீம்கள் அதிகம். எல்லோரும் நடுத்தர வர்க்கத்தினர். முஸ்லீம் பெண்களும் ஆண்களும் சரளமாக ஆங்கிலம் பேசுவார்கள்.

மாலை சம்மறியில் போய் விடயத்தைச் சொன்னேன். சம்மறியில் மூவர் மட்டக்களப்பு. மற்ற எல்லாரும் யாழ்ப்பாணம். சமையல்காரர் தமிழர். கந்தோரில் இருந்து 200 யார் தூரத்தில் இருந்தது சம்மறி. ஞாயிற்றுக் கிழமை மத்தியானம் எல்லோரும் கடலில் குளிப்போம். இந்து சமுத்திரம். சசிவா பகிடி விட்டார். ''பாங்கர் நீ நீந்திப் போகலாம் வருடத்திற்கு யாழ்ப்பாணம்.'' நாங்கள் இருந்த வீடு மிகவும் பழையது. இரண்டு மாடிக்கட்டடம்.

கச்சாய் கடலில் அம்மாவின் அஸ்தி கரைக்கப் போனபோது குளித்த ஞாபகம் வந்தது. கச்சாய் கடல் பரவைக்கடல். அடுத்த ஞாயிறு கதிர்காமம் போனோம். மாணிக்க கங்கையில் குளிக்கும்போது இறையுணர்வு வந்தது. ரெயில் ஸ்ரேசனில் ஒரு பெரிய பலாப்பழம்

வந்திருப்பதாக வந்து கூறினார்கள். ஐயா மீசாலை ஸ்ரேசனில் போட்ட பலாப்பழம் செங்காயாக இருந்தது. சம்மறியில் எல்லோருமாக வெட்டி அதைச் சாப்பிட்டோம். 3 Sisters என்று பிரபல சிங்களப் பாடகிகள் பாடிய இன்னிசை நிகழ்ச்சிக்குப் போய்ப் பார்த்தோம். காலி கதிரேசன் கோவிலில் 10 நாள் திருவிழா நடந்தது. யாழ்ப்பாணத்தில் இருந்து சின்ன மேளம் கூட வந்தது.

பின்னேரம் ரெயில் ஏறி மாலை கோட்டை புகையிரதம் சென்று இரவு மெயில் ரெயிலில் ஏறி காலை மீசாலையில் ஸ்ரேசனில் இறங்கி நடந்தே வீடு சென்று அம்மாவின் திவசத்தில் கலந்து கொண்டதை நினைத்துப் பார்த்தேன்.

திரும்பும்பொழுது மத்தியானம் சாப்பிட்டுவிட்டு யாழ்தேவி ஏறி கோட்டைப் புகையிரத நிலையம் வந்தடைந்து ஆரியபவானில் சாப்பிட்டுவிட்டு இரவு பஸ் பிடித்து நடுச்சாமம் ஒரு மணிக்கு காலி போய்ச் சேர்ந்து நித்திரை கொண்டு காலையில் வேலைக்குச் சென்றது நினைவில் வந்தது.

ஒவ்வொரு நாட்களாக எண்ணத் தொடங்கினேன். காலியில் தியேட்டரில் சிங்களப்படம் தான் ஓடும். 2ஆம் காட்சி தமிழ்ப்படம் ஓடும். 2ஆம் காட்சிக்கு நாங்கள் செல்வோம். எதுவித பயமும் இல்லை.

மக்கள் பீதியுடன் காணப்பட்டனர். புதுவருடத்திற்கு முன்பு ஏதோ நடக்கப் போகிறது என்று பலர் சொன்னார்கள். விஜயவீரவை விடுதலை செய் என்ற சுலோகங்கள் அங்காங்கே காணப்பட்டன. ஆங்கில ஏப்ரல் 1ஆம் திகதியும் வந்தது. பீதி மிகவும் பலமாக பரவத் தொடங்கியது. 4ஆம் திகதி மாத்தறையில் ஏதோ கலகம் என்று கூறினார்கள்.

5ஆம் திகதி J.V.P. யினர் பல பொலிஸ் ஸ்ரேசனை தாக்கினார்கள். அப்பொழுது இராணுவத்திற்கு பெரிய படை இல்லை. பொலிஸ்படை வெறும் 9000 மட்டும்தான். பல இடங்களில் J.V.P.யினர் விரட்டி அடிக்கப்பட்டனர். சில பொலிஸ் ஸ்ரேசன்களையும் சில நகரங்களையும் அவர்கள் கைப்பற்றினார்கள். ஆட்சியும் நடத்தினார்கள். சண்டையில் பல பொலிஸாரும் இராணுவத்தினரும் இறந்தார்கள். காலியில் இருந்து 20 மைல் தூரத்தில் உள்ள எல்பிட்டிய நகரைக் கைப்பற்றினார்கள். சில வாரங்களில் அரசாங்க ஆயுதப்படைகள் மிக இலகுவாகப் புரட்சியை முறியடித்தனர். ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டது. வருடத்திற்கு வீடு செல்ல வேண்டும் என்ற கனவு புஸ்வானம் ஆனது. அண்ணர் கந்தறை பொலிஸில் கடமையில் இருந்தார். கந்தறை கதிர்காமம் றோட்டில் மாத்தறையில் இருந்து 5 மைல் தொலைவில்

இருந்தது. ஒவ்வொரு நாளும் மாலையில் முன் வீட்டிற்குப் போன் செய்வார். கண்டபடி ஒரு இடமும் திரிய வேண்டாம் என்று கூறுவார். "டோய் கொண்ணை சாகவில்லையென்று ஒவ்வொரு நாளும் சொல்லுறார். அதுதான் விடயம்" என்று நக்கல் அடித்தார்கள் சம்மறியில்.

காலி கோட்டைக்குள் பொலிஸ் ஸ்ரேசன் இருந்தது. வேறு இலாகாக்களும் இருந்தது. காலையில் பொலிஸ் வாகனங்கள் அணிவகுத்துச் செல்லும். ஒருநாள் அப்படி அணிவகுத்துச் செல்லும்போது முன்னுக்கு S.P. நவரட்ணம் வாகனத்தைச் செலுத்திக் கொண்டு போனார். பக்கத்தில் தோமஸ் என்ற பறங்கி அதிகாரி இருந்தார். அவர்கள் சென்ற வழியில் J.V.P. யினர் தாக்கியதாகவும் அவர் வாகனத்தை நிறுத்தி வெளியில் வந்து திருப்பித் தாக்கியதாகவும் காருக்குள் பாதுகாப்பாக இருந்த தோமஸ் கொல்லப்பட்டதாகவும் மாலையில் கூறினார்கள்.

ஊரடங்குச் சட்டம் கொஞ்சம் கொஞ்சமாக தளர்த்தப்பட்டது. ஒரு மாதிரி வீடு வந்து சேர்ந்தேன். எல்லா இடங்களிலும் I.C. பார்த்தவுடன் ஆயுதப்படையினர் புன்சிரிப்புடன் கரைச்சல் தரமாட்டார்கள். ஏன் என்றால் தமிழர் எவரும்

அப்புரட்சியில் பங்குபற்றவில்லை. ஊரில் என்னை எல்லோரும் அதிசயமாகப் பார்த்தார்கள். நான் நடந்த சம்பவங்களை கண் காது மூக்கு வைத்து கதைகதையாக அளந்தேன்.

இறந்த சிங்கள இளைஞர்களுடைய சடலங்கள் காலிக் கடற்கரையில் வந்து ஒதுங்கியதை கூறினேன். உயிருடன் பிடிபட்ட J.V.காரரை யூனிபோமுடன் பார்த்ததைக் கூறினேன். இன்னும் கதை கதையாகக் கூறி லீவு முடிய காலி திரும்பினேன். J.V.P. யினரின் புரட்சி புஸ்வானம் ஆனதைப்பற்றி பல வாதப் பிரதிவாதங்கள் உள்ளது தெரிந்ததே.

அரச படைகளை பெருக்கி விட்டதே அவர்கள் செய்த பெரிய பணி. அது அரசுக்குச் சாதகமாக அமைந்தது. மக்கள் நசிந்தனர்.

**புரட்சி என்றால்**
**மருட்சி அல்ல**
**மீட்சி நோக்கி**
**மீட்டுவதே!**



## உன் கண்ணில் நீர் வழிந்தால்

எல்லா பான்களும் வேகமாக வேலை செய்து கொண்டிருந்தன. அதுபோல் எல்லா ஊழியர்களும் சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டிருந்தார்கள். எல்லா ட்யூப் லயிட்களும் எரிந்து கொண்டிருந்தது. ''முந்தியென்டால் லக்சபான கறண்ட் யாழ்ப்பாணத்திற்கு வந்தது. சுன்னாகத்திலே உள்ள ஜெனறெட்றிலை அரைவாசி பழசாம். அதுதான் அடிக்கடி கறண்ட் நிற்குது'' என்றான் பியோன்.

''சரியான சனமாய்க் கிடக்குது. முன்பு என். எம். பெரேரா மந்திரி சபையில் இருந்து தூக்கி எறியப்பட்ட பின் பலிக்ஸ் டயஸ் மந்திரியானார். அப்ப அவரது சகலன் இலங்கை வங்கியின் தலைவராக நியமிக்கப்பட்டார். அவரின் வேண்டுகோளின் படி அந்தக் காலத்தில் இருந்த மனேச்சர் இஞ்ச வேலை செய்கிற எல்லாரையும் கூப்பிட்டுக் கீழ்மாடியில் ஒரு கூட்டம் வைத்து ஆலோசனைகள் கேட்டார். இந்தக் கிளையை எயர் கொண்டிசன் செய்யவேண்டுமென்று

நான் ஒரு கோரிக்கையை வைத்தேன். அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்றேன் நான். ''அது தானே உங்களைத் தண்ணி இல்லாக் காட்டுக்கு மாத்தினவங்கள்'' என்றான் பீயோன். நான் சிரித்தேன். ''சேமிப்புப் பகுதியில் ஒரே சனமாய் கிடக்கு. உங்களை ஒருக்கால் அதிலை போய் பார்க்கட்டாம் சீப் மனேச்சர்'' என்றான் மேல்மாடியில் இருந்து வந்த பீயோன்.

நான் அங்கு போனேன். காசு கொடுப்பதற்கு பல புத்தகங்கள் காசு எடுக்கும் போம் உறுதி செய்யப்பட்டுத் தயாராக இருந்தது. நான் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு வாடிக்கையாளர் நிற்கும் பகுதிக்குப் போனேன். ஒவ்வொருவராகக் கூப்பிட்டு அவர்களுடைய புத்தகத்தையும் காசு எடுக்கும் போமையும் கொடுத்தேன். எல்லோரும் காசை எடுத்துக் கொண்டு போனார்கள். கடைசியாக ஒரு புத்தகமும் போமும் மிஞ்சியது. பலமுறை பெயரைக் கூப்பிட்டேன். ஒருவரும் ஒன்றும் பேசவில்லை. முன்னுக்கு ஒரு வயோதிபர் நின்றிருந்தார். அவரை என்ன பெயர் என்று கேட்டேன். என்ன ஆச்சிரியம் அவருடையது தான் புத்தகமும் போமும். ''ஏன் பேசாமல் நிற்கிறீர்கள்'' என்று கேட்டேன். ''இல்லை ஐயா இது என்ரை பேர பொடியன் இஞ்சை பாங்கிலை எல்லோரும் வேகமாக வேலை செய்கிறதைப் பார்க்க


ஆசையாக இருக்காம். கொஞ்ச நேரம் நின்று பார்க்கப்போறன் என்று கெஞ்சுறான்'' என்றார் அந்த முதியவர். ''சரி நல்லாய் நின்று பாருங்கோ'' என்று கூறிப் புத்தகத்தையும் போமையும் அவரிடம் கொடுத்துவிட்டு நான் எனது கதிரையை நோக்கிப் போனேன்.

''சரியான இடநெருக்கடி இஞ்சை'' என்றார் இன்னும் ஒரு ஊழியர். ''இயந்திரங்கள் உபகரணங்கள் நீங்கலாக ஒவ்வொரு ஊழியருக்கும் 400 கனஅடி இருக்க வேண்டும். இது தொழிற் சட்டம்'' என்றேன் நான். ''உப்பிடிச் சட்டம் பேசித்தான் உங்களை ஊர் ஊராக மாற்றினவங்கள்'' என்றார் அந்த ஊழியர். நான் எனது கதிரையில் போய் அமர்ந்து கொண்டேன்.

வீல் என்று ஒரு குழந்தை அழும் சத்தம் கேட்டது. ஒரு பெண் ஊழியரை அனுப்பி அந்த வாடிக்கையாளரை உள்ளே கூட்டிவருமாறு கூறினேன். குழந்தை தொடர்ந்து சத்தம் போட்டு அழுது கொண்டிருந்தது. அந்த வாடிக்கையாளரின் விடயத்தை முடித்துக் கொடுத்தேன். ''ஏன் பிள்ளை தொடர்ந்து அழுகிறது'' என்று நான் கேட்டேன். ''பிள்ளை என்றால் அழும் தான். அழுதால் தானே பசிக்கும்'' என்றாள் இந்தத் தாய்.

மக்கள் சேவை மகேசன் சேவை
எக்கணமும் அதையே நினையுங்கள்
முக்கனி போல் வாழ்வு
எக்கணமும் கிடைக்கும்.

சோர்வடைய வேண்டாம்
பெயர் நல்லது தரும்
நேர் வழி நன்று
யார் என்ன சொல்லட்டும்.



## பஞ்சாமிர்தம்

84-க்குப் பிறகு வவுனியாவுக்கு அங்காலை போகவில்லை. அந்த அருமையான பயணத்தைப் பற்றி பலர் பல கதைகள் கூறினார்கள். தாண்டிக்குளம் பற்றிய கதைகளைச் சொன்னார்கள். ''சரி இத்தோடை இஞ்சாலை முடியுது. இனி இராணுவ சூனியப் பிரதேசம். அதைக் கடந்தால் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசம்'' என்றார் என்னுடன் பிரயாணத்தில் இணைந்து கொண்ட அந்தப் புதிய நண்பர். அவருக்கு முன் அனுபவம் இருந்தது. காலையில் சாப்பிடவில்லை. ஒரு பிளேன்ரீ குடித்தனான். தலை லேசாகச் சுற்றியது.

''காலமை அந்த தேத்தண்ணிக் கடையில் தந்த தேனீர் நன்றாகத்தான் இருந்தது'' என்றார் நண்பர். ''அதைவிட ராத்திரி அந்த விறாந்தையில் வாங்கில் படுக்கவிட்டது தான் பெரிய விடயம் என்றேன்'' நான். ''வரச்சொல்லி கைகாட்டுகிறான். நாங்கள் வயலுக்கை இறங்கிப் போவம்'' என்றார் முன்னனுபவம் உடைய

ஒருவர். நான் எனது சூக்கேசைத் தலையில் வைத்துக்கொண்டு மற்றவர்களுடன் வரிசையாய் வயலுக்குள் இறங்கி நெடுந்தூரம் நடந்து மெயின்றோட்டை அடைந்தோம். வேறு பலரும் பொருட்களை தலையில்ட சுமந்தார்கள். ''நல்ல காலம் வயலுக்கை தண்ணீர் இல்லை'' என்றார் புதிய நண்பர். எல்லாரும் வரிசையாக நிலத்தில் அமர்ந்து கொண்டோம். பெண்கள் அதிகமாகக் காணப்பட்டார்கள். கூப்பிடுறாங்கள் என்றார் ஒருவர். பலர் முந்தியடித்துக்கொண்டு போனார்கள். நிக்கட்டாம் என்றார் இன்னுமொருவர். திடீர் தலைமைத்துவங்கள் எல்லாத்தையும் ஒழுங்குபடுத்தினார்கள். உடுப்புக்கள் அழுக்கேறி இருந்தன. ''போன கிழமை இப்பிரயாண நேரத்தில மோதல் துவங்கி பல சனத்துக்குக் காயம்'' என்றார் உட்கார்ந்திருந்த ஒருவர். எனக்குப் பயமாக இருந்தது. முன்னுக்குக் குந்தியிருந்த ஒருவர் எங்களை நோக்கி வந்தார். ஐயா எங்க போறியள் நீங்கள். சாவகச்சேரி வங்கியில் வேலை செய்கிறனிங்கள் எல்லோ'' என்று கேட்டார் அந்தச் சிறுவன். ''நான் கண்டிக்குப் போறன். எனக்கு இடமாற்றம்'' என்றேன் நான். ''ஐயோ நீங்கள் இனி அங்க போனால் யார் இனி உதவி செய்யப்போகினம்'' என்று அங்கலாய்த்தான் அந்தச் சிறுவன். உடனே தனது கையிலிருந்த சுடுதண்ணிப் போத்தலைத்

திறந்து தேனீர் ஊற்றித் தந்தான். அது கோயில்லை குருக்கள் தரும் பஞ்சாமிர்தம் போல் இருந்தது. அந்தச் சிறுவன் கூறிய நல் வார்த்தைகள் எனது கடைசிப் பிரியாவிடை உற்சவம் போல் இருந்தது.

"துணிந்து நீங்கள் உங்கள் தேவைகளை வங்கியில் உள்ளவர்களிடம் கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள். அது உங்கள் சட்டப்படியான உரிமை. உங்கள் உரிமைகளை நீங்கள் ஒருவர் ஒருவரினாலும் விட்டுக்கொடுக்கக் கூடாது" என்றேன் நான்.

"தட்டுங்கள் திறக்கப்படும்
கேளுங்கள் கொடுக்கப்படும்"

என்ற கிறிஸ்தவப் பாடல் எனக்கு ஞாபகம் வந்தது.



## முதற் பரிசு

"என்ன ஒரு மணித்தியாலம் போடுகிற திட்டம் போல்" என்று கேட்டார் வேலைமுடிந்து செல்லும் ஒருவர். கடல் அலை வேகமாகக் காற்றுடன் றோட்டில் அடித்துக் கொண்டிருந்தது. றோட்டெல்லாம் நனைந்து தண்ணீராக இருந்தது. இந்திய யுத்தக் கப்பல் துறைமுகத்தில் நின்று கொண்டிருந்தது. பாரிய எண்ணெய் குதங்கள் பிறீமா ஆலை, சையினா பேய் எயர்போட் எல்லாம் நன்றாகத் தெரிந்தது. யுத்தக் கப்பல் நல்லெண்ண விஜயம் தான். "நாளைக்கு இந்துக் கல்லூரியில் மாவட்ட ரீதியில் ஒரு பேச்சுப்போட்டி நடக்குது. நீங்களும் ஒரு மத்தியஸ்தராக வரலாந்தானே" என்று கேட்டார் தயாநிதி. திருமலை இந்து இளைஞர் மன்றத்தின் ஒரு முக்கிய உறுப்பினர். "ஓமோம் நாளைக்கு சனிக்கிழமை வேலை இல்லைத்தானே" என்றேன் நான்.

"ஐயா போட்டுவாறன்" என்று ஜெட்டியை நோக்கி அவசரமாக போய்க்கொண்டிருந்த பக்கீர் தம்பி

கூறினார். இவர் தோப்பூரைச் சேர்ந்தவர். மறுநாள் நான் அங்கு சென்ற பொழுது ''நான் பிரதேசசபைத் தலைவர்'' என்று அறிமுகப்படுத்தினவர் ஒருவர் ''இவர் எனது மகன் இன்று பேச்சு போட்டியில் பேசுகிறார்'' என்று அறிமுகப்படுத்தினார். அவர் வெள்ளை நசனல் வேட்டி அணிந்திருந்தார். அவசரமாக ஓடி ஓடி மத்தியஸ்தர்களிடம் உரையாடிக் கொண்டிருந்தார் அவர். நான் சும்மா கல்லூரிக்குள் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

மாணவ மாணவியர் அதிகமாகக் காணப்பட்டனர். கதிரித்தம்பி அதிபரைக் கண்டேன். இவர் சம்பூர் மகா வித்தியாலய அதிபர். ஓடிப்போய் தோளிலை கைவைத்து உரையாடினேன். ''உங்கள் மாணவர்களும் வந்திருக்கிறார்களா'' என்று கேட்டேன். ''ஓம் இவர்கள் தான்'' என்று மாணவ மாணவியரைக் காட்டினர். கிராமிய அழகு முகத்திலே மிளர்ந்தது. மாணவிகள் முழுப்பாவடை சட்டை வெள்ளை நிறத்தில் அணிந்திருந்தனர். ''உங்கள் சம்பூர் கிராமத்துக்கு ஒருக்கால் வரவேண்டும். இங்கு சனி, ஞாயிறு இலக்கியக் கூட்டங்கள். தொழிற்சங்கக் கூட்டங்கள் என்று சனி ஞாயிறில் தான் அதிக வேலை. மூதூரில் சிவராமலிங்கம் இருக்கிறார். அவரும் நானும் ஒரே நாள் தான் வேலையில் சேர்ந்தோம்'' என்றேன் நான்.

''மத்தியஸ்தர்களை அழைக்கிறார்கள்'' என்று வந்து ஒருவர் கூறினார். மத்திய பிரிவு பெண்கள் பேச்சுப் போட்டியில் மத்தியஸ்தர் மூவரில் ஒருவராக அமர்த்தப்பட்டேன். மற்றவர்கள் இருவரும் 40 குறைவான புள்ளிகளைப் போட்டுக் கொண்டிருந்தனர். நான் புள்ளிகளைப் போடாமல் போட்டியாளர்கள் பேசுவதை அவதானித்துக் கொண்டிருந்தேன். சம்பூர் மாணவியை அடையாளம் கண்டேன். நான் சம்பூர் மாணவிக்கு 80 புள்ளி போட்டு மற்றையவர்களுக்கு 40 புள்ளிக்குக் குறைவாகப் போட்டேன். சம்பூர் மாணவி முதலிடம் பெற்றாள். பிரதேசசபைத் தலைவர் ஓடி வந்து தனது மகனுக்கு மூன்றாம் இடம் தான் கிடைத்ததாகக் கூறினார். நடந்ததை அடுத்தநாள் கந்தோரில் கூறினேன். எல்லோரும் ரசித்தனர்.

ஒரு மாதம் கழித்து பாலேந்திரநாதன் காலையில் வந்து கொழும்பில் நடந்த போட்டியில் பிரதேசசபைத் தலைவர் மகன் முதலிடம் பெற்றதாகக் கூறினார்.

சம்பூர் அதிபர் கந்தோருக்கு வந்தபொழுது பயம் காரணமாகக் கொழும்புக்குப் போக தனது மாணவர்கள் மறுத்துவிட்டதாகத் கூறினார்.

குடிசைகள் அங்கே
பிடியில் அழகுதான்
வடிவு அங்கேதான்
நடிப்பு இல்லையே

பாவம் அவர்கள்
சோகம் பெரியது
கேசம் அழகுதான்
நேசம் என்றுமே.



# பற்றாக்குறை

"இஞ்சாருங்கோ சங்கக்கடையிலை செத்தல் உள்ளி மல்லி எல்லாம் குடுக்கிறாங்கள். சனம் எல்லாம் விடிய எழும்பி க்யூவிற்கு போகுதுகள். நீங்களும் போங்கோவன்'' என்றார் மனைவி.

''நேற்று அதால வரேக்கை பார்த்தனான். செத்தல் இல்லையப்பா. அறிவித்தல் ஒட்டியிருந்தது. 500 கிறாம் பயறு 250 அவல், சக்கரை, 50 உள்ளி, 2 நெருப்புப்பெட்டி, இரண்டு உப்புச் சவக்காரம், 2 வாச சவக்காரம் எல்லாமாய் 12 சாமான். மொத்தமாய் 725 ரூபாய் என்றேன் நான். அதெண்டாலும் பறவாயில்லை போங்கோ என்று அவசரப்படுத்தினார் மனைவி. நான் அங்கு போன பொழுது சுமார் 30 பேர் நின்றார்கள். ''என்ன ஆட்களைக் காணவில்லை'' என்று ஒரு சிறுவனைக் கேட்டேன். ''நம்பர் குடுத்து முடிஞ்சுது. எல்லாரும் வீட்டை போட்டார்கள். இனிச் செல்லச் செல்ல வருவினம்'' என்றான் சிறுவன். ''வாருங்கோ

வாருங்கோ இந்தாங்கோ'' என்று ஒரு நம்பரைத் தந்தார் போட் மெம்பர். 99 நம்பர். 10 மணிக்கு மனேச்சர் வந்தார். கிளை அங்கத்தவர்கள் உதவி செய்தார்கள். க்யூ வேகமாக நகர்ந்தது. ''பாத்தியளே மனேச்சர் தான் நிறுக்கிறார்'' என்றார் ஒரு பெண்மணி. இப்ப எல்லா இடமும் உப்பிடித்தான் சேல்ஸ்மன் தனக்குத் தெரிந்த ஆட்களுக்கு கூடப்போட்டால் மனேச்சர் என்ன செய்கிறது'' என்றார் மூதாட்டி ஒருவர். ''தேங்காய் பால்மா பக்கட் முடிஞ்சுது'' என்றார் மனேச்சர். உதவியாளர் வெளியே வந்து வில்பட்டியலில் தேங்காய் பால்மாவை வெட்டினார். நல்லூர் கந்தசுவாமி கோவில் மணி ஓங்கி ஒலித்தது. நேரம் 10 மணி என்று சொல்லிக் கொண்டனர் பலர்.

''மனேச்சர் என்ரை சாமானைத் தாருங்கோ. நான் விடியாற்காலமை 5 மணிக்கு க்யூவுக்கு வந்தனான்'' என்றார் ஒருவர். தள்ளாடிக் கொண்டிருந்தார். மது நெடில் வீசியது.

''ஏன்ராப்பா குடிச்சிட்டு வந்து கரைச்சல் குடுக்கிறாய்'' என்றார் மனேச்சர். ''நீங்கள் இலையான் கலைக்கேக்கை உங்களிட்டை அரிசி வேண்டிக்கொண்டு போய் மனிசியிட்டை பேச்சு வாங்கினனான். ¼ வாசி கல்லு'' என்றார் அந்தக் குடிகாரன். எல்லாரும் கொல் என்று சிரித்தார்கள்.

"அவற்றை சாமானைக் கொடுங்கோ'' என்று எல்லாரும் சொன்னார்கள். அவர் பொருட்களை வாங்கிக் கொண்டு போனார். பலர் கொண்டுவந்த காசு போதவில்லை. சிலரின் பொலித்தீன் பைகள் கிழிந்தபடியால் பொருட்கள் நிலத்தில் வீழ்ந்தன. வேகமாகக் க்யூ நகர்ந்து கொண்டிருந்தது. தூரத்திலே றேடியோவில் பாட்டுகள் கேட்டுக் கொண்டிருந்தன. மதியம் செய்திக்கு முன் வரும் இசை ஒலித்தது. ஒருவர் க்யூவை விட்டு செய்தி கேட்கப்போனார். தலைப்புச் செய்தியைக் கேட்டுவிட்டு அவர் திரும்பி வந்தார். ''என்னவாம்'' என்றார் ஒருவர். கப்பலிலை இன்னும் சாமான் வருகுதாம்'' என்றார். ''நெடுகத்தானே சொல்லுகினம்'' என்றார் மற்றொருவர்.

பொருட்களை வாங்கிக் கொண்டு வீடு நோக்கி வந்து கொண்டிருந்தேன். ''தாற அரிசி, மா, சீனி, பருப்பு மட்டுமட்டாய் காணும்'' என்றார் என்னுடன் வந்த ஒரு பென்சன்காரர். சின்னப்பிள்ளையள் உள்ளவைக்கு மேல் மிச்சம்'' என்றார் இன்னுமொருவர். ''சீனி போதாது என்றேன்'' நான்.

## எவெறெஸ்ட்

மலையகத்துக்கு வந்து மூன்று மாதம் தான் ஆகி இருந்தது. முதலில் மஸ்கெலியாவில் விட்டார்கள். மஸ்கெலியாவில் இருந்தவர் தனது தில்லு முல்லுகளை மறைப்பதற்காக அரசியல்வாதிகளை பிடித்து என்னை ஹற்றனுக்கு மாற்றிவிட்டார்கள். ''என்ன கீழே கடுமையாகப் பார்க்கிறியள்'' என்று கேட்டார் சத்தியமூர்த்தி. இவர் மாத்தளையைச் சேர்ந்தவர். ஹற்றினில் ஒரு பிரபல்ய சட்டத்தரணியின் மகளைத் திருமணம் செய்தவர். அவர் மனைவி யாழ் கொண்வெண்டில் படித்தவர். "கீழே பார்க்கப் பயமாய் இருக்கிறது.'' என்றாலும் அதாளபாதாளத்தில் ஓடும் அந்த சிறிய அருவியை பார்க்க அழகாய் இருக்கிறது. என்றேன் நான். மேலே பார்த்தேன். முழங்கை போல் வளைந்து வளைந்து ஒற்றையடிப் பாதைகள் தெரிந்தன. அங்காங்கே சிறிய வீடுகள் தென்பட்டன. ''அங்கை பார்த்தியளா வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப் பட்டிருக்கிறது. அதாய்த்தான் இருக்க வேண்டும். விடு'' என்றார் சத்தியமூர்த்தி.

தேயிலைச் செடிகள் கித்துள் மரம் கீழேயும் மேலேயும் தெரிந்தது. காலையில் அவர்கள் போய்வந்தார்கள். நாங்கள் கந்தோர் ஜீப்பில் போயிருந்தோம். முன்னுக்கு நானும் சத்தியமூர்த்தியும் அமர்ந்திருந்தோம். பின்னுக்கு இருந்தவர்கள் எல்லாம் பெண்கள். "சறோசினி நேற்று காசல்றே நீர்த்தேக்கம் பார்க்கப் போயிருந்தோம். சேரும் அவருடைய நண்பரும் படங்கள் எடுத்துக் கொண்டிருந்தார்கள். நாங்களும் அந்த குறூப்பில் நிற்கப்போகிறோம் என்றோம். சேர் பெண்களை நிற்க அவர் விடவில்லை" என்றார் பானுமதி. எல்லாரும் கொல் என்று சிரித்தார்கள். பானுமதி நடிகை பானுமதி மாதிரித்தான் இருப்பார். ஆனால் உயரம் குறைவு. ஹற்றனைச் சேர்ந்தவர் சறோஜினி. பிறந்து படித்தது கண்டியில் தான். அக்கா டிக்கோயாவில் இருந்தார். நான் பயந்து பயந்து ஏறினேன். எல்லாரும் மெதுவாக ஏறினோம். அருகில் ஒரு சிறிய நீர்வீழ்ச்சி தென்பட்டது. "இது தான் கீழே பள்ளத்தில தெரிகிற ஆறு" என்றார் சத்தியமூர்த்தி. கையை நீட்டி தண்ணீரை ஸ்பரிசித்தோம். ஜில் என்று ஐஸ் கட்டி போல் இருந்தது. ஒருவாறு வீடு சென்றடைந்தோம். வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப் பட்டிருந்தது. சிலர் காட்ஸ் விளையாடிக் கொண்டிருந்தார்கள். வேறு சிலர் கரம் விளையாடிக் கொண்டிருந்தார்கள். "தேனீர்

குடிக்கிறீர்களா'' என்று கேட்டார் விக்கிரமசிங்க. இவர் தான் சக ஊழியர். ''இல்லை'' என்று கூறினோம். அவர் சும்மா ஒப்புக்குத் தான் கேட்டார். நாங்கள் குடிக்கமாட்டோம் என்பது அவருக்குத் தெரியும்.

பாவம் விக்கிரமசிங்க. எவ்வளவு துன்பப்பட்டு இந்த மலைச்சாரலில் ஏறி இறங்கி படித்திருப்பான். இனிமேல் கந்தோருக்குத் தாமதாக வந்தால் விக்கிரமசிங்காவிடம் காரணம் கேட்கக் கூடாது எனத் தீர்மானித்தேன். தேயிலைச் செடிகள் கிந்துள் மரங்கள் காணப்பட்டன. சிறிது நேரம் இருந்து விட்டு மெதுவாகக் கவனமாக இறங்கி வந்து கொண்டிருந்தோம். நான் கடைசியாக வந்து கொண்டிருந்தேன். ''ஐயோ கடிச்சிட்டுது'' என்று கத்தினார் ஒரு பெண். எல்லாரும் பயந்து என்ன நடந்தது என்று கேட்டோம். அட்டை ஸ்கேட்டில் ஏறிக் காலில் கடிச்சிட்டுது என்றார். அதற்குப் பிறகு தான் எங்கள் கால்களிலும் அட்டை ஊர்வது தெரிந்தது. பெண்கள் கீழே தெருவிலே உள்ள வீட்டிற்குள் சென்று சரிசெய்து கொண்டார்கள்.

மூன்று நாள் கழித்து விக்கிரமசிங்க வேலைக்கு வந்தார். ''பாவம் நீங்கள் எவ்வளவு சிரமப்பட்டு மலைச்சாரலில் ஏறி இறங்கி வாழ்கிறீர்கள். அந்த நீர் வீழ்ச்சியில் தண்ணீர் ஜில் என்று குளிர்ந்தது''

என்று கேட்டேன் நான். கலகலவெனச் சிரித்தார் விக்கிரமசிங்க. ''சேர் நாங்கள் 5 நிமிடத்தில் ஏறுவோம். அந்த நீர் வீழ்ச்சியில் தான் குளிப்போம்'' என்றார் விக்கிரமசிங்க. ''அப்படியா'' என்று ஆச்சரியப்பட்டேன் நான்.

''சேர் எனக்கு மெயின் றோட்டிலை போகும் போது தான் பயம் யாராவது மோதிவிடுவார்களா என்று'' என்றார் விக்கிரமசிங்க.

எவறெஸ்ட் மலை ஏறுவாயா என்று நான் கேட்க நினைத்தேன். ஆனால் கேட்கவில்லை.

## வெற்றியில் தோல்வி

இனிமேல் கிட்ட இடங்களுக்கு லீவ் டீயூட்டி போகிறவர்களுக்கு பட்டா இல்லையாம் என்று டீ எம் கூறிவிட்டார் என்று எல்லாரும் கூறினார்கள். நான் ரஞ்சித்துடன் ரெலிபோனில் கதைத்தனான். அவர் ''அப்படிக் கூற முடியாது'' என்று கூறினார் என்றேன் நான். ''ரஞ்சித் வேற என்ன சொன்னார்'' என்று கேட்டார் பாலன். ''யாராவது முறைப்பாடு சொன்னால் எழுத்தில் வாங்கச் சொன்னவர். நடப்பதை எழுத்தில் அறிவிக்கச் சொன்னவர்'' என்றேன் நான். நடக்கக்கூடாது நடந்தது. சாந்தன் நிலாவெளிக்கு லீவில் போய்விட்டு வந்து கிளயும் போட்ட பொழுது சாந்தனை கந்தோருக்கு கூப்பிட்டு டீ எம் தாறுமாறாக பேசியதாக கூறினார்கள். ஊழியர்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது. தொழிற்சங்கத்துக்குக் கொழும்புக்கு எழுதுங்கோ என்று எல்லோரும் கரைச்சல் கொடுத்தார்கள். கந்தோரில் வைத்து நான் சொல்லச் சொல்ல ராம் கடிதத்தை எழுதினார். மொழி வளம் நன்றாக வந்தது. சின்ன வயதிலிருந்து

இலக்கியக் கூட்டங்கள். அரசியல் கூட்டங்கள் பார்த்தது நன்றாகவே உதவியது. வாசித்துவிட்டுக் கடிதம் நன்றாக இருப்பதாக எல்லோரும் கூறினார்கள். ''நான் வெளியில போய் ரைப் அடித்துக்கொண்டு வாறன் 5 பிரதிகள் எடுத்து முக்கிய தலைவர்களுக்கு அனுப்புவோம்'' என்றார் ராம். டீ. எம்.க்கு அதை எல்லாம் போய் யாரோ சொல்லிவிட்டார்கள். அடுத்தநாள் டீ. எம். தொலைபேசியில் தொடர்பு கொண்டார். ''அந்தக் கொழும்புக்கு எழுதின கடிதத்தின் கொப்பியை ஒருக்கால் கொண்டாடப்பா'' என்று அன்பாக அழைத்தார்.

கடிதத்தை வாசித்து முடிய டி. எம்.க்கு முகத்தில் பயப்பீதி தெரிந்தது. ''ஏனடாப்பா கொழும்புக்கு எழுதினனி. என்னோடை வந்து கதைத்திருக்கலாமே'' என்றார். ''நீங்கள் தானே காசு கொடுக்க முடியாது என்று கூறிவிட்டீர்கள்'' என்றேன் நான். பல பிரபல்யமான சட்டத்தரணிகள் பெயரைக் கூறி, நான் அவர்களை எல்லாம் ஆலோசிக்கப்போவதாகக் கூறினார். நான் ஒன்றும் பேசவில்லை. இரண்டு நாள் கழித்து கொழும்பில் இருந்து இரண்டு தொழிற்சங்கத் தலைவர்கள் வந்தார்கள்.

''பார்த்தியளோ அவையளைப் பார்த்தாலே தொழிற்சங்க தலைவர்களெனத் தெரியுது. சின்னத்தாடி

கையில் சிகரெட் பைக்கட். நீங்களும் ஒரு சின்ன தாடி வையுங்கோவன்'' என்று பகிடி விட்டார்கள் எல்லாரும்.

என்னையும் கூட்டிக்கொண்டு போய்த் தொழிற்சங்கத் தலைவர்கள் டீ. எம். முடன் கதைத்தார்கள். "நான் இனிமேல் எல்லா கிளயும் அனுமதிக்கிறேன். ஆனால் சாந்தனுடைய கிளயும் கொடுக்க முடியாது'' என்று அடம்பிடித்தார். தொழிற்சங்கத் தவைர்கள் பேசாமல் கொழும்பிற்குப் போய்விட்டார்கள்.

**ஒற்றுமை அவசியம்**
**பற்றிடும் வெற்றிக்கு**
**கற்றவை அதுவே**
**வெற்றி நிச்சயம்.**



## அர்ப்பணிப்பு

முதல்காட்சிப் படம் தியேட்டரில் பார்த்துவிட்டு சரிவான றோட்டில் ஏறிக் கந்தோருக்குக் கிட்ட போனேன். உள்ளுக்கு எல்லா ட்யூப் லயிட்டுகளும் எரிந்துகொண்டிருந்தது. யன்னல் ஊடாகப் பார்த்தேன். கிறிஸ்தோப்பரும், சுப்புறாஜாவும் வேலை செய்து கொண்டிருந்தனர். நான் கதவைத் திறந்துகொண்டு உள்ளே போனேன். எனக்கு அடுத்த தரத்தில் உள்ளவர் தும்புக்கட்டையால் நிலத்தைக் கூட்டிக் கொண்டிருந்தார். ''ஏன் காலையில் பீயோன்மார் கூட்டுவார்கள் தானே'' என்று கேட்டேன். ''மற்ற இடங்கள் மாதிரி இல்லை. இங்கு தோட்டத்துரைமார் எந்த நேரமும் வருவார்கள். நாங்கள் கந்தோரை அழகாக வைத்திருக்க வேண்டும்'' என்றார் அந்த அதிகாரி. சொல்லி முடியவில்லை ஒரு தோட்டத்துரை வந்தார். அண்மையில் தான் அந்த மாவட்டம் மாற்றமாகி வந்தார். காசோலை வைப்புச் செய்யு படிவத்தை நிரப்பித் தந்தார். நாங்கள் றசீட

கொடுத்தோம் எங்கே ரொயிலட்?'' என்று கேட்டார். "நீங்கள் ஆண்கள் ரொயிலட்டுக்கு போக விரும்புகிறீர்களா அல்லது பெண்களின் ரொயிலட்டுக்குப் போக விரும்புகிறீர்களா'' என்று நான் கேட்டேன். சத்தம் போட்டுப் பெரிதாகச் சிரித்தார். எனது தோளில் கை வைத்து "நீங்கள் சுவாரசியமாகக் கதைக்கிறீர்கள்'' என்று கூறிவிட்டு அவர் போய்விட்டார். "என்ன செய்கிறீர்கள்?'' என்று கிறிஸ்தோப்பரிடம் கேட்டேன். "கறவை மாட்டுக் கடன் கனபேருக்குக் கொடுத்தோம். அது பற்றிய அறிக்கையை கண்டிக்கு அனுப்பவேணும் தானே'' என்றார் கிறிஸ்தோப்பர். "ஏன் நீங்கள் ரைப் செய்கிறீர்கள். திங்கட்கிழமை ரைப்பிஸ்ட் செய்ய வேண்டிய வேலை தானே'' என்று நான் கேட்டேன். "திங்கட்கிழமை காலையில் டீ.எம். வருவார். வந்தால் உடனே அவர் அனுமதியைத் தருவார்'' என்றார் கிறிஸ்தோப்பர். சுப்புராஜா நடைமுறைக்கணக்கு மாதாந்த அறிக்கைகளை எடுத்து விலாசங்களை ஒவ்வொன்றாக ரைப் அடித்து கொண்டிருந்தார். "ஏன் இதை கனிஷ்ட ஊழியர் எடுக்கலாம் தானே'' என்றேன் நான். "சார் இவங்க பிழையாய் பெயரை எழுதீட்டா எல்லாரும் சிரிப்பாங்க'' என்றார் சுப்புராஜா. எங்களுக்கு தோட்டத்துரை வேலை தரமாட்டாங்கள். "தோட்டத்திலே கிளாக் வேலை நினைத்து தான் நாங்கள் படிப்போம். எல்லாரும்

நன்றாக ரைப் அடிப்போம் " தொடர்ந்து சொன்னார் சுப்புராஜா. நான் குவாட்டசுக்கு சென்றேன். வங்கிக்கு அருகில் ஒரு சிறிய குன்றின் மேல் இருந்தது அந்த வீடு. சமையல்காரன் மாணிக்கம் முன்னுக்கு நின்றார். முழு ஹற்றன் நகரமுமே அழகாய்த் தெரிந்தது. அங்காங்கே பல்புகள் எரிந்து கொண்டிருந்தது. "அங்கே பார்த்தியளே சிவனொலிபாதமலை அதுதான் சேர்ச். கோவில். பொலிஸ் ஸ்டேசன். பஸ் ஸ்ராண்ட். பிள்ளையார் கோவில். ரெயில் ஸ்டேசன். பாடசாலைகள் என்று எல்லாத்தையும் காட்டினார் மாணிக்கம்.

"எங்க வீட்டில தண்ணீர் இல்லை. இங்கு குளிக்கப்போறோம்" என்று கூறிக்கொண்டு பானுமதியும் கணவரும் அடுத்த நாள் காலையில் வந்தார்கள். இது மலைநாட்டில் சர்வசாதாரணம்.

"சார் எனது மகன் பண்டாரவளையில் சென்தோமஸ் கல்லூரியில் படிக்கிறார். ரெலிபோன் லயினில் நிற்கிறார். கொஞ்சம் அட்வயிஸ் பண்ணுங்க சார்" என்று கூறினார் சுப்புராசா. "தம்பி நீங்கள் நன்றாகப் படிக்கவேணும். உங்கள் அப்பா 5 கிலோமீற்றர் நடந்து வந்து படித்ததாகக் கூறுகிறார்" என்றேன் நான். "ஆமாம் சார்" என்று அவர் கூறினார். "சார் அம்பாறையிலை சிவராமலிங்கம்

என்னுடன் வேலை செய்தார்'' என்றார். சுப்புராஜாவுக்கும் எனக்கும் ஒரே வயது. ''ஆமாம் சிவராமலிங்கமும் நானும் ஒரே நாளில் தான் வங்கியில் சேர்ந்தோம்'' என்றேன் நான்.

தேயிலைத் தோட்ட கந்தோர்களிலும் அரச தனியார் காரியாலயங்களிலும் பணிபுரிபவர்கள் ஆங்கிலப் புலமை மிக்கவர்களாகவும் உரையாடக்கூடியவர்களாகவும் காணப்பட்டனர். சுப்புராஜாவை எல்லாரும் மதிப்பாகவும் கௌரவமாகவும் கணித்தனர். நான் இடமாற்றத்தில் வந்து சில மாதங்களில் அவர் மாரடைப்பால் இறந்த செய்தி எனக்குக் கிடைத்தது. அவரைத் தொடர்ந்து கிறிஸ்தோப்பரும் மஸ்கெலியாவில் பிறந்து வளர்ந்து அங்கேயே பணிபுரிந்த சுப்பிரமணியமும் இறைவனடி சேர்ந்தனர்.



## ஒரு ரூபாய்

"இந்தக் கோவில் 40 ஏக்கர் விஸ்தீரனமானது. தீர்த்தக்கேணி 4 ஏக்கர் விஸ்தீரனமானது. நான்கு பக்கமும் பெரிய வாசல் உள்ளது. ஒவ்வொரு வாசலும் 60 அடி அகலமானது. கோபுரம் 135 அடி உயரமானது. 90 அடி நீளமானது. ஒரு வாசலிலே நின்று பார்த்தால் மற்ற வாசல் தெரியாது. உள்ளே அம்மன் கோவில் வாசலிலே நின்று பார்த்தால் நான்கு வாசல் கோபுரங்களும் தெரியும்'' என்றார் அந்த வாலிபர். "நீங்கள் என்ன படிக்கிறீர்கள்'' என்று கேட்டேன். "சார் நான் எம்.ஏ. சோசியேலாஜி. யாப் கிடைக்கலே'' என்று கூறினார் அவர். முக்கியமான விடயங்கள் எனது டயறியில் எழுதிக் கொண்டிருந்தேன். "ஐயா ஒரு ரூபாய் குடுங்க சேர்'' என்று கேட்டார் ஒரு முதியவர். என்ன இவர் ஒரு ரூபாய் தான் பிச்சை கேட்கிறார் என்று ஆச்சரியப்பட்டேன் நான். ஒரு ரூபா அவரிடம் கொடுத்து விட்டேன். உள்ளே நடந்து சென்றேன். "பார்த்தீர்களே நிலத்தில் எல்லா இடமும் பெரிய பாறாங்கற்களை செதுக்கிப் பதித்திருக்கிறார்கள் சீமெந்து மாதிரி ஒன்றால் ஒட்டி இருக்கின்றார்கள்'' என்றேன் நான். "ஆமாம் சார்'' என்றார் அவர். நாங்கள்

நடந்து தீர்த்தக் கேணிக்குக் கிட்ட வந்துவிட்டோம். சுற்றி உள்ள மண்டபத்தின் சுவர்களிலே திருவாசகப்பாடல் எல்லாம் அண்மைய சதாப்தத்தில் எழுதப்பட்டிருந்தது. அப்பொழுது "ஒரு ரூபாய் தாங்கோ" என்று ஒரு மூதாட்டி கேட்டார். என்ன இவரும் ஒரு ரூபாய் தான் கேட்கிறார் என்று நினைத்த நான் ஒரு ரூபாயைக் கொடுத்துவிட்டு மேலும் நகர்ந்தேன். "கோவில் என்றால் சிதம்பரம். இந்தக் கோயில் நான்கு நாயன்மார்களாலும் பாடப்பெற்றது" என்று நான் கூறினேன். "ஆமா சார். ஒரே வாசலால் எல்லாரும் வரல்ல. ஒவ்வொருவரும் ஒவ்வொரு வாசலால் வந்தாங்க" என்று கூறி ஒவ்வொருவர் வந்த வாசலையும் கூறினார். நாங்கள் நடந்து கொண்டிருந்தோம். ஒரு சிறுவன் ஓடிவந்து "ஐயா ஒரு ரூபா தாங்கோ" என்று கேட்டான். நான் கொடுத்துவிட்டு மேலே நடந்தோம்.

"பரதநாட்டியத்திலே உள்ள 108 தாண்டவங்களும் ஒவ்வொரு வாசலிலும் 54 ஒரு பக்கமும் மற்றப் பக்கத்தில் 54-மாக இருக்கிறது" என்று காட்டினார். இங்கு 5 விதமான சபை உள்ளது என்றார்.

ஆயிரம் வருடங்களுக்கு முன் நடராசருக்கும் பார்வதிக்கும் இங்கு ஒரு நடனப் போட்டி நடந்தது. விஷ்ணு பிரம்மா நாரதர் தேவர்கள் முன்னிலையில் போட்டியை ஆரம்பித்து வைத்தனர். இருவரும்

சளைக்காமல் ஒரே மாதிரி ஆடினார்கள். விஷ்ணு கூறினார் இருவரும் ஒரே மாதிரி ஆடாமல் ஒருவர் வேறுமாதிரி ஆடி போட்டியில் வெல்ல வேண்டும் என்று கூறினார். உடனே தில்லை நடராசர் ஒற்றைக்காலால் வலது தோட்டை கழற்றி நிலத்தில் போட்டு மீண்டும் ஒற்றைக்காலால் எடுத்து காதில் மாட்டினார். பார்வதி தோல்வியடைந்தார். ஒரு மைல் தூரத்தில் போய் இருக்க வேண்டுமென்று ஒப்புக் கொள்ளப்பட்டது. அங்கே பார்வதி எல்லைக்காளி இருக்கிறார் என்று கூறினார் அந்த வாலிபர். ஒரு சிறுமி வந்து ஒரு ரூபாய் கேட்டார். அவருக்கு ஒரு ரூபாயை கொடுத்துவிட்டு மேலும் நடந்து முதலில் உள்ளே வந்த பாதையால் வெளியேறினோம்.

வாசலிலே என்னிடம் ஒரு ரூபாய் வாங்கிய நான்கு பேரும் ஒன்றாக அமர்ந்து ஒரு சோற்றுப் பாசலை அவிழ்த்து சாப்பிட்டுக் கொண்டிருப்பதை நாம் கண்டோம். இது அதிசயத்தையும் அனுதாபத்தையும் எனக்குத் தந்தது. மிகுதி வரலாற்றை நான் இருந்த லொட்ஜில் அவர் சொல்லச் சொல்ல நான் டயறியில் எழுதிக்கொண்டேன்.

**தில்லையில் தொழுதால்**
**தொல்லைகள் தீரும்**
**பல்கலை சிற்பங்கள் தீரும்**
**எல்லையில்லா இன்பமே.**

## எந்தையும் தாயும்

"வண்ணாத்திப் பாலத்தால் சைக்கிளில் போற வாற சனத்துக்கு ஹெலி சுட்டுக் கனபேருக்கு சரியான காயம்." வெள்ளிக்கிழமை காலையில் வேலைக்குச் சென்றபொழுது சாவகச்சேரியில் பலர் கூறிய செய்தி இதுதான். கனகம்புளியடி பன்றித்தலைச்சி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த பல வாடிக்கையாளர்கள் வங்கிக்கு வந்த போது உள்ளே வந்து இதைக் கூறிச் சென்றார்கள். எல்லோரும் சுறுசுறுப்பாக வேலை செய்தார்கள். வேளைக்கு வேலையை முடித்தால் கோவிலுக்குப் போகலாம். இன்றும் வெள்ளிக்கிழமை என்றாலே எல்லாருக்கும் உற்சாகம்தான். சனி, ஞாயிறு விடுமுறை அல்லவா. பரமானந்தத்தைக் கூட்டிக்கொண்டு நான் மாலை பெற்றோல் செட்டுக்கு அருகாமையில் இருக்கும் ஸ்ரீவள்ளி கபேக்கு ரீ குடிக்கப் போனேன். "ஏன் ஒரு மோட்டார் சைக்கிள் வாங்கி ஓடுங்கோவன்" என்றார் அவர். அந்த கடையில் ஐயா கண்ணன் மஞ்சரி - கலைமகள்

சஞ்சிகை வாங்குவது ஞாபகம் வந்தது. "எனக்கு உந்த மண்ணெண்ணெய் ஓடுறது சரிவராது. அந்த மணத்துக்கு தலை இடிக்கும்" என்றேன். "என்றாலும் என்னிலை உங்களுக்கு அன்புதான். எல்லாரும் இருக்க என்னைத் தான் நெடுக ரீ குடிக்கக் கூட்டியாறியள்" என்றார். "அன்புமில்லை ஒன்றுமில்லை. என்ரை அப்பற்ர ஊர் பெரியமாவடி எல்லே. இனி அங்கே அக்காவும் இருக்கிறா. புதினங்கள் இருந்தால் நீ சொல்லுவாய். அதுதான்" என்றேன். நீங்கள் சுன்னாகத்திலை இருந்திருக்கலாம். இஞ்ச கேட்டெல்லே வந்தனிங்கள். இப்ப கனதூரம் சைக்கிள் ஓடவேண்டீ வந்திட்டுது" என்று பரிதாபப்பட்டார். "பாப்பம். பதவி உயர்வு கிடைத்தால் வெளி மாகாணம் போய் வேலை செய்ய ஆசை" என்றேன். விண்ணப்பப் படிவத்தில் இது எழுதியிருந்தேன். ரீ குடித்துவிட்டு வங்கிக்கு இருவரும் சென்றோம். "உமக்கு எத்தனை வயது" என்று முகாமையாளர் வாமதேவன் கேட்டார். "47ஆம் ஆண்டு பிறந்தனான். இப்ப 92 ஏப்பிரலுக்கு 45 முடியுது. ஏன் கேட்டனீங்கள்" என்று திருப்பிக் கேட்டேன் வாமனிடம். "இல்லை உமக்குப் பதவி உயர்வு கிடைத்தால் வெளி மாகாணத்திற்கு மாற்றப் பார்ப்பார்கள்" என்றார். மாலை வேலை முடிந்தது. நான் சைக்கிளை எடுத்துக்கொண்டு தபால் கந்தோர்

வீதியால் கனகம்புளியடியை நோக்கி உளக்கத் தொடங்கினேன். மக்கள் சைக்கிளில் போய்க் கொண்டும் வந்துகொண்டும் இருந்தார்கள். இது ஒரு நல்ல அறிகுறி. ஏனென்றால் பாதையில் ஒரு இடமும் ஹெலித் தாக்குதல் குண்டுத் தாக்குதல் நடைபெறவில்லை என்பது அர்த்தம்.

றோட்டு ஓரங்களில் மண்ணெண்ணெய் விற்கும் கடைகள் சிறிய பலசரக்குக் கடைகள் எல்லாம் காணப்பட்டன. பெருங்குளம் சந்தியை அண்மித்தபோது தம்பிராசா அத்தான் றோட்டைக் கடந்து கல்வயல் நோக்கிப் போவது தெரிந்தது. இவர் மீசாலை மாவடிப்பிள்ளையார் கோவில் மனேச்சர். பெருங்குளம் சந்தியைத் தாண்டிச் செல்லும் பொழுது மகேஸ்வரிக் குஞ்சாச்சி நடந்து சென்று கொண்டிருந்தார். நான் சைக்கிள் பிறேக்கை பிடித்து ''பின்னுக்கு ஏறுங்கோவன்'' என்று கேட்டேன். ''இல்லை நீ கனதூரம் போக வேண்டும். இன்னும் கொஞ்சத்தூரம் தானே நான் நடந்து போறன்'' என்றார். நான் கெருடாவில் கோவில் வாசலை அண்மித்தபொழுது அவவின் தங்கை யோகா வீட்டு வாசலில் நின்றா. கனகம்புளியடிக்கு அப்பால் செல்ல றோட்டு ஓரங்களில் தேங்காய் சிறு சிறு குவியல்களாக விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தன. மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலை அண்மித்த

பொழுது மட்டுவிலில் பிரசித்தமான கத்தரிக்காய் சாக்கு சாக்காக மொத்த வியாபாரம் நடந்து கொண்டிருந்தது. நிறையப் பேர் சைக்கிளில் போய்க்கொண்டும் வந்துகொண்டும் இருந்தனர். நான் வண்ணாத்திப் பாலத்தை நோக்கிச் சைக்கிளை உளக்கிக் கொண்டிருந்தேன்.

ஆனையிறவில் இருந்து ஹெலி வரும் சத்தம் கேட்டது. எல்லாரும் வேகமாக சைக்கிளை உளக்கத் தொடங்கினார்கள். வண்ணாத்திப் பாலத்திற்கு அப்பால் சிறிய ஒரு அண்ணமார் கோவில் இருந்தது. அதற்குள் போய் உள்ளிட்டால் ஹெலித் தாக்குதலில் இருந்து தப்பிவிடலாமென்ற நப்பாசை. ஹெலி தாளப் பறந்தது. நான் கடவுளே கடவுளே என்று மனதுக்குள் கும்பிட்டேன். ஹெலி தாளப்பறந்து பார்த்துவிட்டுச் சென்றது. ஒன்றும் செய்யவில்லை. எல்லாரும் மெதுவாகச் சைக்கிளை உளக்கத் தொடங்கினார்கள். தூரத்தில் செல்வராசா செல்வது தெரிந்தது. இவர் எங்கடை வீரசிங்கம் வித்தியாசாலையில் சின்ன வயதில் ஒரே வகுப்பில் படித்தவர். நான் சைக்கிளை வேகமாக உளக்கி அவருக்குக் கிட்டப்போனேன். அவர் நவக்கிரியில் கலியாணம் செய்தவர். ''எப்படி'' என்று விசாரித்தேன். ''சுன்னாகத்துக்கு முதல் எங்க வேலை செய்தது?'' என்று அவர் விசாரித்தார். யாழ்ப்பாணம் ஸ்ரான்லி றோட் கிளையில் வேலை செய்தேன். நாலு

வருடம் முடிய சுன்னாகத்துக்கு மாத்தி விட்டார்கள். நான் பேசாமல் வந்தது நல்லதாய் போச்சு இல்லாவிட்டில் கோட்டை பிரச்சினேக்கை அம்பிட்டிருப்பேன்'' என்றேன். அவருடன் கதைத்துக்கொண்டு வீடு சென்றடைந்தேன்.

''ஒரு நல்ல செய்தி'' என்று மனைவி சொன்னா. ''என்ன'' என்று கேட்டேன். யாழ்ப்பாணத்திலை மாவட்ட முகாமையாளர் கொழும்பு காரியாலயத்தோடை ஐசிஆர்சிக்குப் போய் வைலெஸ்ஸில் கதைக்கிறதெல்லே. உங்களுக்குப் பதவி உயர்வு கிடைத்திருக்காம். மஸ்கெலியாவுக்கு இடமாற்றமாம்'' என்று மனைவி கூறினா. ''நானும் பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு வரட்டே'' என்று மிகுந்த ஆசையுடன் கேட்டா.

மஸ்கெலியாவில் என்ன நடந்தது. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டியதா? எட்டவில்லை.

இந்நூலாசிரியரைப் பற்றி !



சி. குமாரலிங்கம்

செய்யும் தொழிலே தெய்வம் எனக் கொண்டு தன் பணியைச் சிறப்பாகச் செய்தவர்.

பிறருக்கு உதவும் உள்ளம் கொண்ட இவர், இலங்கையில் பல இடங்களில் வங்கிப் பணியாற்றியிருக்கிறார். அத்துடன் தொழிலாளர்களின் நல்வாழ்விற்காகத் தொழிற் சங்க ஊழியராகவும் பணியாற்றியிருக்கிறார்.

இலக்கியத்தில் தணியாத ஆர்வம் கொண்ட இவர் தாம் வேலை செய்த இடங்களில் உள்ள கலை இலக்கிய சங்கங்களுடன் இணைந்து பணியாற்றி வந்தார், இப்போதும் இலக்கியப் பணியாற்றி வருகிறார்.